பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 30, செவ்வாய்க்கிழமை 15.08.2017 கதிர் 282

## ஷிராந்தி, யோசித இன்று சி.ஐ.டி. முன் ஆஜராவர்!

கொழும்பு, ஓக.15
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவியார் ஷிராந்தி ராஜபக்ஷவும், அவர்களது இரண்டாவது மகனான யோசித ராஜபக்ஷவும் குற்றப் புலனாய்வுத்துறையினர் முன்னிலையில் இன்று ஆஜராகுமாறு பணிக்கப் பட்டிருக்கின்றனர்.

ராஜபக்ஷ குடும்பத்தவர்களுக்கு எதிராக இந்த வாரத்தில் காத்திரமான பக்கம் 18

# மடுத் திருவிழா பெரு மழையால் ரத்து

## 4 லட்சம் பக்தர்கள் வெள்ளத்தில்; வெளியேற்றும் நடவடிக்கை தீவிரம்

- மடுவிலிருந்து எமது சிறப்புச் செய்தியாளர் -

மடு, ஓக.15
வரலாற்றுச்சிறப்புமிக்க மடு அன்னையின் திருத்தல ஆவணிவிண்ணேற்பு விழா இன்றுநடைபெறாது. அங்குபேய் மழைகொட்டுவதால் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது. அதனால் திருவிழா ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே அங்கு திருவிழா வுக்காக முற்கூட்டியே திரண்டிருக்கும் சுமார் நான்கு லட்சம் பக்தர்கள் மற்றும் யாத்திரிகர்களை வெள்ளத்தில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றும் பணி நேற்றேமும்முரமாக ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த மூன்று நாள்களாகக் கொட்டும் மழை நேற்றிரவும் கடும் சீற்றத்துடன் தொடர்ந்ததால் நிலைமை மோசமடையும் சூழல் தென்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

நேற்றே சிறு வழிபாட்டுடன் திருவிழா நிறைவு பெற்றுள்ளது. மன்னார் பக்கம் 03



# முஸ்லிம்களுக்கு முல்லையில் காடுகளை அழித்து வீடுகள்!

## ஐ.நா.திட்டத்தின் கீழ் வழமைக்கு முரணாக நடவடிக்கை எனச் சீறுகிறார் முதல்வர் விக்கி

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 15

"முல்லைத்தீவு மாவட்டத்தில், ஐ.நாவின் மனித குடியிருப்புத் திட்டங்கள் குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அங்கு வழமையான நடைமுறைகளுக்கு உட்படுத்தப்படாமல் காடுகள் அழிக்கப்பட்டு முஸ்லிம்களுக்கு வீடுகளும் வீதிகளும் அமைக்கப்படுகின்றன."

-இவ்வாறு ஐ.நா. அதிகாரிகள் முன்னிலையில் நேற்று குற்றச் சாட்டுகளை அடுக்கினார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன். பக்கம் 18

## ஓட்டோவைப் பந்தாடிய ரயில்!

### ஓட்டுநர் பலி: வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஓக.15
வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் பாதுகாப்பற்ற ரயில்வே கடவையில் ஓட்டோ ஒன்றைப் பந்தாடிய ரயில் அதனை சுமார் ஐநூறு மீற்றருக்கு உருட்டிச்சென்றது. இந்த விபத்தில் ஓட்டோச் சாரதி பக்கம் 18





## செஞ்சோலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவிகளின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று

### தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் அனுஷ்டிப்பு

செஞ்சோலைப் படுகொலையின் 11 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகளால் முல்லைத்தீவு வள்ளிபுனத்தில் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்ட செஞ்சோலையில், கடந்த 2006 ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதியில் இருந்து பக்கம் 18

## அமைச்சர் பதவியில் தாம் தொடர்வதா, இல்லையா என்ற முடிவை முன்னாள் போராளிகளிடம் விட்டுவிட்டாராம் டெனீஸ்!

### முதல்வரும், ரெலோவும் நீதி, நேர்மை, நியாயமாக நடக்கவில்லை என்கிறார்

மன்னார், ஓக.15
"நீதிக்காகவும், நேர்மைக்காகவும் அமைச்சர் பதவியிலிருந்து போராடுவதா? அல்லது வெளியில் வந்து போராடுவதா?

"தமது உயிர்களைத் துச்சமென மதித்து எமது மக்களுக்காகப் போராடிய மாவீரர் குடும்பங்களிடமும் முன்னாள் போராளிகளிடமும் இந்த முடிவு எடுக்கும் பொறுப்பை விட்டு விடுகிறேன்."

–இவ்வாறு கூறினார் வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பக்கம் 18



## டெனீஸ் குறித்து முடிவு செய்ய ரெலோ தலைமைக் குழு கூடும்

யாழ்ப்பாணம், ஓக.15
வடக்கு மாகாண சபையில் தாம் வகிக்கும் அமைச்சர் பதவியை நேற்று ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் இராஜினாச் செய்யும்படி ரெலோ கட்சி அதன் மாகாண சபை உறுப்பினர் பா.டெனீஸ்வரனுக்குப் பணிப்புரை விடுத்துள்ளநிலையில் அதைச்செய்வதற்கு டெனீஸ்வரன் தவறிவிட்டார் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் அவருக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய ஒழுங்கு நடவடிக்கை பக்கம் 18

# நெதர்லாந்தின் ரூ.1,400 கோடி சுகாதார அபிவிருத்தி நிதி திரும்பிச் சென்றால் முதல்வரே அதற்கு முழுப் பொறுப்பு



## அதனை ஒழுங்கு செய்த முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.15
வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் நடைமுறைப் படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள பாரிய சுகாதார அபிவிருத்தி திட்டத்துக்காக நெதர்லாந்து அரசு ஒப்புதல் வழங்கிய ஆயிரத்து நானூறு கோடி ரூபா நிதி திரும்பி சென்றால்; அதற்கான முழுப் பொறுப்பையும் முதலமைச்சரே ஏற்க வேண்டுமென வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா, சேமமடுவில் புதிதாக அமைக்கப் படவுள்ள கிராமிய வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை பக்கம் 03

# யாழ்.பல்கலைக்கழகத்தில் செஞ்சோலை நினைவேந்தல்!



யாழ்ப்பாணம், ஓக. 15

செஞ்சோலை படுகொலையின் 11ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ். பல்கலைக் கழகத்தில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுஷ்டிப்பு யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று பிற்பகல் நடத்தப்பட்டது.

இதன்போது உயிரிழந்த மாணவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், இதில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ஆர்.விக்னேஸ்வரனும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்.

இதேவேளை, இந்த அஞ்சலி நிகழ்வில் யாழ். பல்கலைக் கழகஆசிரியர் சங்க தலைவர், பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர், கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





## சேமமடுவில் வைத்தியசாலைக்கான அடிக்கல் நட்டார் சத்தியலிங்கம்!


கொழும்பு, ஓக. 15

வவுனியா - சேமமடுவில் நீண்டகால தேவையாக காணப்பட்ட வைத்தியசாலைக்கான அடிக்கல்நட்டுவைக்கப்பட்டது.

வட மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால் அடிக்கல் நடப்பட்ட இந்த வைத்தியசாலை முதற்கட்டமாக சுமார் 9 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

இந்த வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர், வைத்திய தேவைக்காக சுமார் 25 கிலோ மீற்றர் செல்ல வேண்டிய தேவையேற்படாது என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வைத்தியசாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் வட மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் க.சிவலிங்கம் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (க-100)



## முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதியாக 3 ஆவது தடவையாக தெரிவானார் வேல்நம்பி!

கொழும்பு, ஓக. 15

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தின் பீடாதிபதிக்கான தேர்தலில் மீண்டும் பேராசிரியர் தி.வேல்நம்பி வெற்றிபெற்று பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த -2011 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதியாகப் பணியாற்றி வரும் பேராசிரியர் தி.வேல்நம்பி மூன்றாண்டுகளைக் கொண்ட பீடாதிபதி பதவிக் காலத்தில் மூன்றாவது தடவை பதவிக் காலத்தை இன்று முதல் ஆரம்பிக்கவுள்ளார்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் 1996 ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கணக்கியல் துறை விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

பின்னர் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தின் பீடாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

இவர், கணக்கியல், முகாமைத்துவம், தமிழியல் சார்ந்த துறைகளில் பல்பரிமாண ஆளுமை மிக்கவராக விளங்குகின்றார். சிறந்த பேராசி ரியர் மற்றும் சிறந்த கல்விசார் ஆய்வாளர் முதலிய விருதுகளை வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் இவர் பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் இருந்து நல்லூருக்கு வேல் தாங்கிய பாதயாத்திரை ஆரம்பம்!



வவுனியா, ஓக. 15

வவுனியா, வேப்பங்குளம் காளி கோவிலில் இருந்து நல்லூர் ஆலயத்தின் தேர்த் திருவிழாவை முன்னிட்டு வேல் தாங்கிய பாதயாத்திரை நேற்றுக் காலை ஆரம்பமானது.

காளி கோவிலின் நிர்வாகி சாமி அம்மா தலைமையில் இடம்பெற்ற விசேட பூஜைகளையடுத்து பாதயாத்திரை ஆரம்பமாகியது. இதன்போது பெருந்திரளான பக்தர்கள் யாத்திரையில் கலந்துகொண்டனர்.

114ஆலயங்களில்தரிசிப்பை மேற்கொண்டு நல்லூர் தேர்த் திருவிழா அன்று யாத்திரை நல்லூர் ஆலயத்தை அடைந்து நிறைவடையவுள்ளது. (க-100)

## சின்மயா மிஷனில் இன்று அருளுரை

நல்லூர், ஓக.15

நல்லூர் உற்சவத்தையொட்டி பருத்தித்துறைவீதி, இலக்கம் 700 என்ற முகவரியில் உள்ள யாழ்ப்பாணம் சின்மயா மிஷனில் ஆன்மீக அருளுரை நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

நாளாந்தம் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் மாலை 7.30 மணி முதல் 8 மணிவரை அருளுரை வழங்குவார்.

இன்றைய தலைப்பு: 'உள்முகப்படுத்தப்பட்ட மனம்' (இ)

## நல்லூரில் இன்று நாடகத் திருவிழாவில் இரு நாடகங்கள்

நல்லூர் பெரும் திருவிழாக் காலத்தில் செயல்திறன் அரங்க இயக்கம் நடத்தும் 'நாடகத்திருவிழா' எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்.

இந்த நாடகத் திருவிழா நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள பண்டாரக்குளத்தின் முன்பாகவுள்ள பஞ்சபூத அரங்கிலே நடைபெறும். இதில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'குழந்தைகள் பாவனை செய்யும்' (சிறுவர் நாடகம்) இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிமுதல் 7.45 மணிவரையும், பேராசிரியர் நந்தியின் 'சிங்கப்பூர் டொக்டர்' (நகைச்சுவை நாடகம்), இரவு 8 மணி முதல் 9 மணி வரையும் இடம்பெறவுள்ளன. (இ)

## பொன்சேகாவின் வீட்டுக்கு அருகில் புகைப்படம் எடுத்த இருவர் கைது!



கொழும்பு நாராஹென்பிட்டி ஹிங்-எல பிரதேசத்தில் உள்ள முன்னாள்இராணுவத்தளபதியும் அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் இல்லத்திற்கு அருகில் சந்தேகம் ஏற்படும் வகையில் புகைப்படம் எடுத்த இரண்டு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நுவரெலியா மாவட்டம் லிந்துலை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள்பிரதேசத்தில்அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயத்திற்கு சென்று கொண்டிருந்த போது புகைப்படம் எடுத்துள்ளனர். அந்த சந்தர்ப்பத்தில் சரத் பொன்சேகா வீட்டில் இருந்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நாவல பிரதேசத்தில் உள்ள உணவகம் ஒன்றில் தொழில் புரிந்து வருபவர்கள்என்றும்தெரியந்துள்ளது.




யாழ்ப்பாணம், ஓக.15

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் பாட்டு: எஸ்.சாய்லக்ஸ்மி, வயலின்: அ.ஜெயராமன், மிருதங்கம்:க.கண்ணதாஸ், கெஞ்சிரா: ஞா.வசந்.

***

நல்லூர் உற்சவத்தில் உலக சைவத் திருச்சபை இலங்கை நடத்திவரும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் மாலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று சைவப்புலவர் சைவநெறி சன்மார்க்கர் வே.சிவராசா 'மெய்யடியார்கள் மாண்பு' என்னும் தலைப்பில் ஆன்மீக உரையாற்றுவார். (ச)

# வடக்கு சுகாதாரத் துறைக்கு நெதர்லாந்தின் உதவித் திட்டப் பெறுமதி 1,460 கோடி ரூபா!

## தெளிவுபடுத்துகின்றார் மாவை எம்.பி.

"நெதர்லாந்து அரசின் உதவித் திட்டத்தின் மூலம் வடக்கு மாகாணத்தின் சுகாதார அபிவிருத்திக்குக் கிடைக்கூடிய நிதியின் அளவு ஆயிரத்தி 406 கோடி ஐம்பது லட்சம் ரூபாவாகும்."

–இப்படிச் சுட்டிக்காட்டியுள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான மாவை சேனாதிராசா.

நேற்று முன்தினம் இவ்விடயத்தை ஒட்டி அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இந்த நிதி ஒதுக்கீடு பற்றிய விவரங்கள் சரியாகச் சுட்டிக்காட்டப்படவில்லை என்று நேற்றைய 'காலைக்கதிர்' செய்தியில் ஆசிரிய குறிப்பு ஒன்று இடம் பெற்றிருந்தது.

அவ்விடயம் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ள மாவை சேனாதிராசா, தமது அறிக்கையைச் சீர்செய்து அனுப்பி வைத்துள்ளார். அதன் பிரகாரம் அந்த அறிக்கையில் சம்பந்தப்பட்ட பந்தி பின்வருமாறு அமைவது மிகச் சரியானதாகும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

*" டாக்டர் சத்தியலிங்கம் வடக்கு மாகாண சபையின் அமைச்சரவையில் நல்ல நிர்வாகியாகவும், சுகாதாரத் துறையிலும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதிலும் அளப்பரிய சேவையை அர்ப்பணித்துச் செயலாற்றியவர். உதாரணமாக அப்பணிகளில் ஒன்றுதான் நெதர்லாந்துடன் செய்யப்பட்ட சுகாதாரத் துறைக்கான ஒப்பந்தமாகும்.*

*"அவரின் முயற்சியின் பிரகாரம் வடக்கு மாகாணத்தில் சுகாதாரத்துறை அபிவிருத்திக்கு ஆயிரத்து 406 கோடி ஐம்பது லட்சம் ரூபாவுக்கான திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. இது தொடர்பில் அவர் நெதர்லாந்து அரசுடன் பேசி அவர்களை இணங்க வைத்துள்ளார். அதன் பிரகாரம் நெதர்லாந்து அரசு ஆறு கோடி யூரோக்களை (சுமார் 960 கோடி ரூபாவை) வழங்கும். எஞ்சிய பணம் மத்திய சுகாதார அமைச்சினால் வழங்கப்படும்.*

*அடுத்து, சென்ற வாரத்தில் ஜப்பானிலிருந்து 7 ஆயிரம் கோடி டொலர் திட்டம் ஒன்று நாட்டுக்குக் கிடைக்கும் இணக்கம் ஏற்பட்டுள்ளது. அதில் கணிசமான தொகையை வடக்கிற்குத் திருப்பும் நடவடிக்கையை அமைச்சர் சத்தியலிங்கம் எடுத்திருந்தார்.*

*இனி இந்த நிதித் திட்டங்கள் என்னவாகும் என்பது தெரியவில்லை. அந்த ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கு அவருக்கு (சத்தியலிங்கத்துக்கு) முதல்வர் இடமளிக்கவில்லை."*

–இவ்வாறு தமது முன்னைய அறிக்கையின் சம்பந்தப்பட்ட பகுதியைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார் மாவை சேனாதி ராசா எம்.பி.

**ஆசிரியர் குறிப்பு**

'காலைக்கதிர்' நாளிதழ் மேற்படி செய்தி தொடர்பில் நேற்று வெளியிட்ட ஆசிரியர் குறிப்பை அவதானித்து, உடனடியாக பொருத்தமான விளக்கத்தை அனுப்பி உதவி, வாசகர்களுக்கு உண்மை நிலைவரத்தை தெளிவுபடுத்திய மாவை சேனாதி ராஜா எம்.பிக்கு எமது நன்றிகள். (ஆ–ர்)

# மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான 20 ஆவது திருத்தம் ரத்துச்செய்யப்படும்?

## ஜனாதிபதி முடிவெடுத்தார் எனத் தகவல்

கொழும்பு, ஓக.15

மாகாணசபைத் தேர்தலை ஒரே நாளில் நடத்தும் வகையில் 20 ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டு வருவதற்கான தீர்மானத்தை இரத்துச் செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடிவெடுத்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய எழுதிய கடிதத்தை அடுத்தே ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

மாகாணசபைத் தேர்தலை ஒரே நாளில் நடத்தும் வகையில் 20 ஆவது திருத்தச்சட்டத்தை கொண்டு வருவதற்கான தீர்மானம் அமைச்சரவையில் ஒருமனதாக எடுக்கப்பட்டு வர்த்தமானியும் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும் இந்த தீர்மானத்திற்கு கூட்டு எதிரணி உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன. கடந்தவாரம் நடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலும் இந்த திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். மாகாண சபை தேர்தலை ஒத்தி வைக்க வேண்டாம் என்றும் அது அரசமைப்பை மீறும் செயலாக அமைந்துவிடும் என்றும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி நடத்திய ஆலோசனையை அடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு எதிரான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ம)

## நெதர்லாந்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:–

கடந்தவருடம் இந்தப் பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் வைத்தியசாலையொன்றின் தேவை பற்றி பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. உண்மையில் இந்த பிரதேசத்தில் வைத்தியசாலையொன்றின் அவசியம் உணரப்பட்டாலும் அதற்கான நிதிஒதுக்கீடு செய்வதில் பிரச்சினை இருந்தது. எமது மாகாணத்திற்கான மத்திய அரசின் நிதியொதுக் கீடு மூன்றில் ஒன்றாக குறைக்கப்பட்ட நிலையில் அபிவிருத்தி வேலைகளை செய்வது பிரச்சினையாக இருந்தது. எனினும் வழமைபோல நிதியொதுக்கீடு போதாதென்று மத்திய அரசாங்கத்தை வசைபாடுவதை தவிர்த்து நிதியை பெறுவதற்கான புதிய மூல உபாயங்களை பயன்படுத்திச் செயற்பட்டோம். அதன்விளைவாக மீள்குடியேற்ற அமைச்சின் நிதிப்பங்களிப்புடன் மாகாணத்தின் சுகாதார சேவை விருத்திக்கான நிதியாக ஐம்பது லட்சம் ரூபா கிடைக்கப்பெற்றது. அதனைவைத்தே இந்த வைத்தியசாலை அமைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. மேலதிக நிதியை சுகாதார அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

சேமமடு பிரதேசம் புவிசார் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாகும். ஒருகாலத்தில் விவசாயச் செய்கைக்கு பெயர்போன பிரதேசமாகும். 1956–60 காலப்பகுதியில் விவசாய செய்கையை ஊக்கவிப்பதற்காக நன்கு திட்டமிடப்பட்ட வகையில் குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசமாகும். அந்தக் காலத்தில் செல்வம் கொழிக்கும் பூமியாக இந்தப்பகுதி இருந்த வந்துள்ளது. எனினும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் மக்கள் இடம்பெயர நேரிட்டது. தற்போது மக்கள் மீளகுடியேறிவரும் நிலையில் அவர்களுக்கான அடிப்படைக் கட்டுமானங்களை அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியத்தை உணர்ந்தே இந்த வைத்தியசாலை அமைக்கப்படவுள்ளது.

இதேபோன்று வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் தெரிவுசெய்யப்பட்ட பொது வைத்தியசாலைகளில் விசேட வைத்திய அலகுகளை நிர்மாணிப்பதற்கு நெதர்லாந்து அரசாங்கம் மத்திய அரசின் ஊடாக ஆயிரத்து நானூறு கோடி ரூபா நிதியை வழங்க முன் வந்துள்ளது. இந்த பெரும் தொகை நிதியை பெற்றுக் கொள்வதற்கு எனக்கு இந்த மாகாணத்தில் யாரும் வழிகாட்டவுமில்லை; அதற்காக பாராட்டவும் இல்லை.

மத்திய சுகாதார அமைச்சினால் எமது மாகாணத்திற்கு ஒதுக்கப்படும் நிதி இங்குள்ள தேவைகளை பூர்த்தி செய்யக் காணாமல் உள்ளது. அவர்கள் நாட்டின் ஏனைய எட்டு மாகாணங்களைப் போலவே எம்மையும் பார்க்கின்றார்கள். எனவேதான் மத்திய சுகாதார அமைச்சிடம் பேசி அவர்களின் அனுமதியுடன் வெளிநாட்டு நிதி வழங்குநர்களிடமிருந்தும் இவ்வாறான நிதியுதவிகளை பெற்று இந்த மாகாணத்தின் சுகாதார துறையை அபிவிருத்தி செய்ய செயற்பட்டு வந்தேன். – இவ்வாறாக செயற்படும் என்னைப் போன்றவர்கள் மீது கேட்பார் கதைகேட்டு, பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வெளியில் துரத்துவதற்கே ஆர்வமாக செயற்படுகின்றார்கள் – என்றார்.

வவுனியா பிரதேச சபையின் முன்னாள் தலைவர் க.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்களென பலரும் கலந்துகொண்டனர்.

## மடுத்திருவிழா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறை மாவட்ட மறைத்தூது மேலாமையாளர் ஆயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் நிலைமை ஆராயப்பட்டது. திருவிழாவை ரத்துச் செய்யும் முடிவு எடுக்கப்பட்டது.

இன்று காலை திருநாள் திருப்பலி நடைபெறுவது சந்தேகம் என மடுப் பரிபாலகர் அருட்தந்தை எமிலியானுஸ்பிள்ளை அறிவித்துள்ளார்.

காலநிலையை அவதானித்தே இன்று காலை திருநாள் திருப்பலியை ஒப்புக்கொடுப்பதா இல்லையா என்பது குறித்துத் தீர்மானிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

வரலாற்றில் என்றுமில்லாதவாறு மடுவை அண்டிய பகுதிகளில் கடந்த 3 தினங்களாகக் கனமழை பெய்துவருகிறது. இதனால் மடு அன்னையின் திருத்தலம் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இன, மத பேதமின்றி லட்சக்கணக்கான பக்தர்கள் கூடியுள்ள மடுவில் பெருமழையால் பெரும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

யாத்திரிகர்கள் தங்கியுள்ள கூடாரங்களுக்குள் வெள்ளம் புகுந்ததால் சிறுவர்கள், முதியவர்கள் தங்க இடமின்றி அந்தரிக்கின்றனர். மழைக்கு ஒதுங்குவதற்கு இடமின்மையால் அங்கு பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. உணவுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மழை தொடர்வதால் நேற்று மாலை நடைபெறவிருந்த நற்கருணைப் பெருவிழா நிறுத்தப்பட்டு பிரியாவிடைச் செபம் சொல்லப்பட்டது. வழமையாக திருவிழாவான இன்று வழங்கப்படும் அன்னையின் திருச்சொரூப ஆசீர்வாதம் நேற்று மாலையே வழங்கப்பட்டது.

காலி மறை மாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை மடு அன்னையின் திருச்சொரூப ஆசீரை வழங்கினார்.

இதனையடுத்து மடுவில் கூடியிருந்த பக்தர்கள் இரவிரவாக தமது வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கினர் என அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

மடுத் திருத்தல வரலாற்றில் மழையால் திருவிழா ஒருபோதும் தடைப்பட்டதில்லை என மடு ஆலய வட்டாரங்கள் கூறின.

வருடந்தோறும் ஆவணி 15இல் கொண்டாடப்படும் மடுத் திருவிழாவில் இலங்கையின் நாலா பக்கங்களிலிருந்தும் சுமார் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்வது வழமையாகும்.

இவ் வருடம் நேற்று வரைக்கும் நான்கு லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் மடுத்திருப்பதிக்கு வருகை தந்திருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதுவும் இம்முறை அதிகமான பக்தர்கள் கொடியேற்ற நாளிலேயே இங்கு வந்து மரங்களின் கீழ் கூடாரம் அமைத்துத் தங்கியிருந்தனர் என மடு பரிபாலகர் வட்டாரம் தெரிவித்தது.

கடந்த பல மாதங்களாக மன்னார் மாவட்டத்தில் வறட்சி தாண்டவமாடிக் கொண்டிருந்த போதும் கடந்த மூன்று தினங்களாக மடுப்பகுதியில் பெய்த கடும் மழையால் மடு ஆலய பிரதேசம் வெள்ளத்தால் சூழ்ந்துள்ளது. அங்கு தங்கியிருந்த அதிகமான பக்தர்கள் விழாவில் கலந்து செல்லத் திட்ட மிட்டு இருந்தபோதும் மடுத்திருப்பதியில் விழா நடைபெறும் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையால் விழாவை ரத்துச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

வழிபாட்டு நேரங்களில் மக்கள் தங்கியிருக்கின்ற போட்டிக்கோ பகுதிகளும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் தண்ணீரில் மூழ்கியுள்ளன.

எனவே வழக்கமான வழிபாடுகள் நடைபெறுவது சாத்தியமற்றதாகியுள்ளது. நேற்று வழக்கமாக நடைபெறும் மாலைவழிபாடு நிறுத்தப்பட்டு அதற்கு பதிலாக நேற்று மாலை 4.30 மணிக்கு பிரதான ஆலயத்துக்குள் திருச்செபமாலையின் இரண்டு காரணிக்கங்கள் ஒன்று தமிழிலும் மற்றையது சிங்களத்திலும் செபிக்கப்பட்டு மடு அன்னைக்கு யாத்திரிகர்களால் பிரியாவிடை செபம் சொல்லப்பட்டு ஈற்றில் மரியன்னையின் திருச்சொரூப ஆசீர்வாதத்துடன் நேற்றே இவ் வழிபாடு நிறைவு பெற்றது. (உ)






காலைக்கதிர்
Kalaikkathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## உயர் நீதிமன்றின் முக்கிய தீர்ப்பு

இலங்கையின் தற்போதைய அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான தீர்ப்பு ஒன்று உயர்நீதிமன்றத்தினால் அண்மையில் வழங்கப்பட்டிருக்கின்றது.

தமிழ் ஊடகங்கள் அது குறித்து கொடுத்த முக்கியத்துவம் கூட தென்னிலங்கையில் கொடுக்கப்படவேயில்லை. அந்தத் தீர்ப்பின் காரம் அதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

இத் தீர்ப்புக் குறித்து இந்தப் பத்தியில் ஏற்கனவே ஒரு தடவை கோடி காட்டியிருந்தோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்த நாட்டில் பிரிவினையை – வேறு தனி நாடு ஒன்றை – கோருவதால் அக் கட்சியைத் தடை செய்து அறிவிக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்து களனியைச் சேர்ந்த ஒருவர் தாக்கல் செய்த மனு தொடர்பாகவே உயர் நீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கியிருக்கின்றது.

பிரதம நீதியரசர் பிரசாத் டெப், நீதியரசர்கள் உபுல் அபேரத்ன, அனில் குணரட்ண ஆகியோரைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயமே ஏகமனதாக இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கின்றது.

மனுதாரரின் மனுவைத் தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம், இலங்கையில் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் தனது நிலைப்பாடு என்ன என்பதை இந்தத் தீர்ப்பு ஊடாகக் கோடி காட்டப்பட்டிருப்பது மிக முக்கியமானதாகும்.

எதிர்காலத்தில் அரசமைப்புத் திருத்தம் ஒன்று அல்லது புதிய அரசமைப்பு ஒன்று உயர் நீதிமன்றின் பரிசீலனைக்கு வரும்போது, அதனை அச்சமயத்தில் உயர் நீதிமன்றம் எத்தகைய வழியில் அணுக வேண்டும் என்பதற்கு வழிகாட்டலும், கட்டுப்பாடும் விதிக்கும் வகையில் இந்தத் தீர்ப்பு அமைந்திருக்கின்றது.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒரு மக்கள் கூட்டம் சமஷ்டி முறையிலான அல்லது அதை ஒத்த ஒரு தீர்வைக் கேட்பதை நாட்டின் பிரிவினை என்று அர்த்தப்படுத்த முடியாது என உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பில் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தெரிவித்துவிட்டது.

ஆகவே, இத்தகைய உரிமையைத் தமிழர் தரப்பு வலியுறுத்தும்போது – வற்புறுத்தும்போது – அது இலங்கை நீதிமன்றங்களினால் அங்கீகரிக்கப்பட முடியாதது என்ற கதையை தென்னிலங்கை ஆட்சித் தரப்புகள் இனி மேலும் அவிழ்த்து விட முடியாது.

'சமஷ்டி' என்ற சொல் சமஸ்கிருதச் சொல் என்பதால் இலங்கை தமிழரசுக் கட்சி தனது யாப்பை 2008 இல் மாற்றி, 'சமஷ்டி' என்பதற்குப் பதிலாக 'இணைப்பாட்சி' என்ற பதத்தை பயன்படுத்துகின்றது. 'கூட்டாட்சி' அல்லது ' இணைப்பாட்சி' என்ற பெயரில் அச்சொல்லை பயன்படுத்துவதால் அதுவும் பிரிவினை என்று அர்த்தம் கொள்ளத் தக்கதல்ல என்றும் உயர் நீதிமன்றம் குறிப்பிட்டிருக்கின்றது.

அது மாத்திரம் அல்லாமல், இந்த விடயத்தைத் ஒட்டி – 'உள்ளக சுயநிர்ணய உரிமை' குறித்து – தெளிவான விளக்கத்தைத் தர முயன்ற உயர் நீதிமன்றம் அதற்காக பிற நாடுகளின் இரண்டு உயர்நீதிமன்றங்கள் வழங்கிய முக்கிய தீர்ப்புகளை ஏற்று, அங்கீகரித்துத் தனது தீர்ப்பில் மேற்கோள் காட்டிக் கையாண்டிருக்கின்றது.

ஒன்று – 2010 இல் சர்வதேச நீதிமன்றத்தினால் 'கொசோவா ஆலோசனைக் கருத்து' தொடர்பில் வழங்கப்பட்ட மதியுரை.

அடுத்தது – கியூபெக் பிரிவினை தொடர்பாக கனடா உயர்நீதிமன்றம் 1998 இல் வழங்கிய தீர்ப்பு.

அந்தத் தீர்ப்பு வாசகங்களை இலங்கை உயர் நீதிமன்றம் தனது தற்போதைய வழக்கின் தீர்ப்பில் மிக வெளிப்படையானதாக மேற்கோள் காட்டுவதன் மூலம் கனடாத் தீர்ப்பை அங்கீகரித்திருக்கின்றது.

நீதி பரிபாலன முறைமைகளின்படி இவ்வாறு பிறிதொரு நாட்டின் உயர்நீதிமன்றத் தீர்ப்பை நமது நாட்டு நீதிமன்றம் தனது தீர்ப்பு ஒன்றுக்கான ஆதாரமாகக் கையாளுமானால், அந்த நாட்டின் உயர் நீதிமன்றத் தீர்ப்பை எமது உயர் நீதிமன்றம் வழிகாட்டுக் குறிப்பாக – நெறிப்படுத்தவும், கட்டுப்படுத்தவும் தகுந்த வழிமுறையாக – அங்கீகரிக்கின்றது எனக் கொள்ளலாம்; கொள்ளவேண்டும்.

கனடா உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பில், ஒரு மக்கள் கூட்டத்தினர் உள்ளக சுய நிர்ணய அடிப்படையில் உரிமைகளைக் கோருவதற்கு உரித்துடையவர்கள் என்பது விவரிக்கப்படுகிறது.

அதேசமயம், அந்த உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப்படும்போது – அதன் காரணமாக – பிரிந்து செல்வதற்காக வெளியக சுயநிர்ணய உரிமை அம் மக்கள் கூட்டத்திற்கு உரித்தாகின்றது எனக் கனடா உயர்நீதிமன்றம் குறிப்பிட்டிருக்கின்றமையும் இப்போது இலங்கை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் இடம்பெற்றுள்ளது.

அதேவேளை, கனடா உயர் நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடுகின்றமைபோல, உள்ளக சுயநிர்ணய உரிமையை தமது மக்கள் கூட்டத்துக்காகக் கோரும் உரித்து இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு உண்டு என்பதையும் இலங்கை உயர் நீதிமன்றம் அத் தீர்ப்பில் ஏற்று அங்கீகரித்துள்ளது.

அப்படிப் பார்த்தால், அந்த உரித்தை – உரிமையை – வழங்குவதற்கு ஆட்சித் தரப்பு தொடர்ந்து மறுக்குமானால் வெளியக சுயநிர்ணய உரிமை குறித்துச் சிந்திக்கும் உரித்து தமிழர்களுக்கு உள்ளது என்பதையும் இலங்கை உயர்நீதிமன்றம் கூறாமல் கூறியிருக்கின்றது என்றே பொருள் கொள்ளவேண்டும்.

இந்த வகையில், மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்ப்பு, வேண்டுமென்றே தென்னிலங்கை ஊடகங்களினால் அந்த மக்களுக்கு எடுத்துச் சொல்லப்படவில்லை என்றே கொள்ள வேண்டியுள்ளது.

# வெளிவிவகார அமைச்சர் பதவிக்கு நிரந்தரமாக ஒருவரை நியமிக்க வேண்டாம்!

## ரவி கருணாநாயக்க கோரிக்கை



வெளிவிவகார அமைச்சுப் பதவிக்கு நிரந்தரமாக ஒருவரை நியமிக்க வேண்டாம் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க கோரியுள்ளார்.

தாம் பதவி விலகியமையால் ஏற்பட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் பதவி வெற்றிடத்திற்கு நிரந்தர அடிப்படையில் எவரையும் நியமிக்க வேண்டாம் என ரவி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியுள்ளார் என கொழும்பு இணையத் தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நாடாளுமன்ற வாழ்க்கைக்கு 40 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு கண்டியில் நடைபெற்ற விசேட மத வழிபாட்டு நிகழ்வுகளில் பிரதமருடன் ரவி கருணா நாயக்கவும் இணைந்து கொண்டார்.

இதன் போது நிரந்தர அடிப்படையில் வெளிவிவகார அமைச்சுப் பதவியை எவருக்கும் வழங்க வேண்டாம் என அவர் பிரதமரிடம் கோரியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சுப் பதவி சாகல ரட்நாயக்கவிற்கு வழங்கப்பட உள்ளது என வெளியான தகவல்களை அடுத்தே ரவி கருணா நாயக்கவால் இவ்வாறான கோரிக்கை முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அரசியல் நாடகங்களைத் தவிர்த்து மக்களின் காணிகளை விடுவிக்குக!

## டக்ளஸ் தேவானந்தா எம்.பி கோரிக்கை

கொழும்பு, ஒக். 15

அரசியல் நாடகங்களை அரங்கேற்றிக் கொண்டிருக்காமல் மக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பதற்கு முன்வரவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வலிகாமம் வடக்கு, கேப்பாபிலவு, இரணைதீவு உட்பட எமது மக்களுக்குச் சொந்தமான காணிகள் இன்னும் அந்த மக்களது பாவனைக்கு வழங்கப்படாதுள்ள நிலையில், எமது மக்கள் வீதியில் இறங்கிப் போராடி வருகின்றனர்.

கேப்பாபிலவு மக்களின் போராட்டம் சுமார் 06 மாதகாலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இத்தகைய நிலையில், இந்த போராட்டங்கள் உரிய தரப்பினரின் அக்கறைக்கு எட்டப்படாமல் இருப்பது எமது மக்களது துரதிஷ்ட வசமான நிலைமையாகும்.

மக்களின் காணிகளை விடுவிப்போம் என வாக்குறுதிகள் வழங்கி, அவர்களின் வாக்குகளை பெற்று ஆட்சிக்கு வந்தவர்களும், ஆட்சி அமைப்பதற்காக அதே வாக்குறுதியை வழங்கி எமது மக்களின் வாக்குகளைப் பெற்று, அரசியல் பதவிகளைப் பெற்றவர்களும் இன்று அரசியல் நாடகங்களை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்களே அன்றி, மக்களது காணிகளின் விடுவிப்பு தொடர்பில் எவ்விதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டவர்களாக அல்லர்.

எமது மக்களுக்கு அவர்களது காணிகளே தேவை அன்றி வெறும் அறிக்கைகளும் மேடைப் பேச்சுக்களும் அல்ல.



எனவே, வெறும் சாக்குப் போக்குகளைக் கூறிக்கொண்டு எமது மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்றிக் கொண்டிருக்காமல், அவர்களது காணிகளை விடுவித்துக் கொடுப்பதற்கு அனைவரும் முன்வர வேண்டும்.

எமது மக்களது பிரச்சினைகள், தேவைகளைத் தீர்க்காமல் வெறும் பதவிகளை மாத்திரம் கட்டிப்பிடித்துக் கொண்டிருகின்றமையால் அது மக்களுக்கு எவ்விதமான பயனையும் தரப்போவதில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக அக்கரப்பத்தனையில் போராட்டம்!

அக்கரப்பத்தனைகிளாஸ்கோ தோட்டப் பிரிவான நெதஸ்டல் தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பணிபகிஷ்கரிப்புடன் ஆர்ப்பாட்டத்தில் நேற்றுக் காலை ஈடுபட்டனர்.

கிளாஸ்கோ தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 125 தொழிலாளர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை தோட்டத்தின் கொழுந்து மடுவத்திற்கு முன்னால் நடத்தியுள்ளனர். இந்த தோட்டத்தின் தொழிலாளர்களின் வருமானத்தை பாதிக்கும் வகையில் நல்ல விளைச்சலைத் தரக்கூடிய தேயிலை செடிகள் அடங்கிய தேயிலை மலை மூடப்பட்டுள்ளது என்றும் தோட்டத்தில் முறையான சுகாதாரத்தை பேணும் வகையில் வைத்தியர் ஒருவர் இல்லாதமையை சுட்டிக்காட்டியும், ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளில் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது என்றும் கோரி தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டத்தையும், முழுநாள் பணிபகிஷ்கரிப்பையும் தொழிலாளர்கள் முன்னெடுத்துள்ளனர்.



எனவே, உடனடியாக எமது கோரிக்கைகளை தோட்ட நிர்வாகம் தீர்த்துத் தர வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் கோஷங்களை எழுப்பி, பதாதைகளை ஏந்திய வண்ணம் போராட்டத்தை நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## அயடீன் உப்பை பாவிக்கும்போது கவனிக்க வேண்டியவை;

– உப்பை நீரில் கழுவக் கூடாது.
– ஒளி புகாத கடும் நிறமான போத்தல்களிலேயே உப்பை சேமித்து வைத்தல் வேண்டும்.
– சேமித்து வைக்கும் போத்தலை சூரிய வெளிச் சமோ,அடுப்பு வெக்கையோ படாத இடத்தில் வைத்தல் வேண்டும்.
– சமைத்ததன் பின்பே உப்பை உணவில் சேர்த்தல் வேண்டும்.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

16.08.2017
புதன்கிழமை

நட்சத்திரம் : ரோகினி பி.இ 12.13 வரை
திதி : நவமி பி.ப 1.50 வரை

சுபநேரம் : 4.35 – 6.05 வரை
இராகுகாலம் : 12.05 – 1.35 வரை

## கண்டி நகரில் பிரதமர் ரணில்!

பிரதமர் ரணில் விக்கிரம சிங்க நேற்று கண்டி நகரில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார்.

பிரதமரின் நாடாளுமன்ற அரசியல் வாழ்விற்கு 40 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு இந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

ரணிலின் பாரியார், திருமதி மைத்திரி விக்கிரமசிங்க, அமைச்சர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, கயந்த கருணாதிலக, மலிக் சமரவிக்ரம, நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க, உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளனர்.

முதலில் ஸ்ரீதலதாமாளிகைக்குச் சென்ற பிரதமர், சமய வழிபாடுகளில் ஈடுபட்டார். பகல் தான நிகழ்வு பிரதமரின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

## பைசருக்கு எதிர், விஜயதாசவிற்கு ஆதரவு: வாக்களிக்க உள்ளதாம் கூட்டு எதிர்க்கட்சி!

கொழும்பு, ஓக. 15

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கு எதிராகவும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு ஆதரவாகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்களின் போது வாக்களிக்க உள்ளோம் என கூட்டு எதிர்க்கட்சி அறிவித்துள்ளது.

பைசர் முஸ்தபா மற்றும் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையோசனைகள் முன்வைக்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு நிலையில் விஜயதாச ராஜபக்ஷவுக்கு ஆதரவாகவும் பைசர் முஸ்தபாவிற்கு எதிராகவும்





செயற்பட உள்ளளோம் எனக் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா கொழும்பு ஊடக மொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாம் விஜயதாச ராஜபக்ஷவிற்கு ஆதரவளிப்போம். விஜயதாச ராஜபக்ஷவே அதிகளவில் மஹிந்த ராஜபக்ஷவை விமர்சனம் செய்தார்.

கொள்கை அடிப்படையில் அன்று மஹிந்த அரசை விட்டு விஜயதாச விலகியிருந்தார். விஜயதாச ராஜபக்சவிற்கு எதிராக அரசு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர முயற்சிப்பதற்கான காரணம் அவரது கொள்கைகளாகும்.

விஜயதாச ராஜபக்ஷவின் கொள்கைகளை நாம் மதிக்கின்றோம். எனினும், பைசர் முஸ்தபாவின் செயற்பாடுகளை நாம் எதிர்க்கின்றோம்.

பைசர் முஸ்தபாவிற்கு எதிராக ஆளும் கட்சியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தால் நாம் ஆளும் கட்சியினருடன் இணைந்து பைசருக்கு எதிராக வாக்களிப்போம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(க)

## விஜயதாசவுக்கு எதிரான பிரேரணை: விளக்கமளிக்கும் விமல் வீரவன்ஸ



கொழும்பு, ஓக. 15

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுகின்றமை தொடர்பில் மஹிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸ விளக்கமளித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஆராய்வதற்கு ஐக்கிய நாடுகளின் பிரதிநிதியான பென் எமர்ஷன் இலங்கை வந்திருந்தார்.

இதன்போது, இலங்கையின் உள் விவகாரங்களில் சர்வதேசம் தலையிடக் கூடாதென நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வருவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

(க)

## விஜயதாசவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை; ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் தீர்மானம்!

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் ஐ.தே.க. செயற்குழுவில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நல்லாட்சி அரசை அசௌகரியத்துக்குள்ளாக்கும் வகையிலும் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறும் வகையிலும் செயற்பட்டு வருகிறார் என அண்மைக் காலமாக விமர்சிக்கப்படுகின்றார்.

அத்துடன், கடந்த அரசின் ஊழல் மற்றும் மோசடிகளுடன் தொடர்புடையவர்களுக்கு எதிரான வழக்குகளிலிருந்து அவர்கள் தப்பித்துக் கொள்வதற்கான ஒத்துழைப்பை அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ வழங்கி வருகிறார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை நீதியமைச்சுப் பதவியிலிருந்து நீக்குமாறு வலியுறுத்தி ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை முன்வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும், இந்தப் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான இறுதித் தீர்மானம் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவிலேயே மேற்கொள்ளப்படும் என்று அக்கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் நடைபெறவுள்ள ஐ.தே.க. செயற்குழுக் கூட்டத்தின் போது கட்சி யின் மூத்த உறுப்பினர்களின் ஆலோசனைகளும் இது தொடர்பில் பெறுறுக் கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலத்திரனியல் அடையாள அட்டை ஒக்ரோபர் மாதம் முதல் விநியோகம்!

புதிய இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் விநியோகிக்கப்படவுள்ளது. இது தொடர்பாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்தவை வருமாறு:-

உத்தேச புதிய இலத்திரனியல் அடையாள அட்டையில் உயிரியியல் தொடர்பான தரவுகள், விரல் அடையாளம் உட்பட சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். இந்தத் திட்டம் இரண்டு கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும். முதற்கட்டத்தின் கீழ் ஒக்ரோபர் மாதத்திலிருந்து புதிதாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு இந்த இலத்திரனியல் அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி இந்த யோசனை அடங்கிய சட்டமூலம் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும். தேசிய அடையாள அட்டைக்காக புதிதாக விண்ணப்பிப்பவர்கள் மற்றும் அடையாள அட்டை விவரங்களை மாற்றுவதற்கு விரும்புவோர் இந்த வசதியை பெற்றுக் கொள்ள முடியும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வடக்கு, கிழக்கு இளைஞர் புரட்சிக்கும் எமது அரசியல் கொள்கையே காரணம்!

### நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

சாதாரண விடயங்கள் எனக் கருதி கைவிட்ட அரசியல் விடயங்களே இறுதியில் மிகப் பெரிய அழிவை ஏற்படுத்தியது. வடக்கு, கிழக்கு ஆயுத மோதலுக்கும் இளைஞர் புரட்சிக்கும் எமது அரசியல் கொள்கையே காரணமாக அமைந்தது என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இவற்றை மாற்றியமைக்க நல்லதொரு வாய்ப்புக் கிடைத்துள்ளது. இனவாதம் என்பதை விடுத்து இன ஐக்கியத்தில் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் முன்செல்ல வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசியல் மற்றும் அரசியல் தலைமைத்துவம் தொடர்பிலான கற்கைக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அதிதியாக கலந்துகொண்ட உரையாற்றும்போதே அமைச்சர் விஜயதாச மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டில் இனவாதம் பலமடைய டொனமூர் அரசியல் அமைப்பே காரணமாக அமைந்தது.

வெளிநாட்டவரின் கொள்கையில் இலங்கையில் இனவாதம் பலப்படுத்தப்பட்டது என்பதே உண்மையாகும். இதனை இன்றும் நாம் அனுபவித்து வருகின்றோம். பிரித்தானிய ஆதிக்கவாதிகள் இந்தக் கொள்கையை வேண்டுமென்றே இலங்கையில் உருவாக்கினர்.

அவர்களது ஆதிக்கத்தை தக்கவைக்க இதனை முன்னெடுத்தனர். அவர்கள் உருவாக்கிய இனவாத, பிரிவினைவாத கொள்கையில் இருந்து மீண்டு எழ முடியாத நிலையில் இன்றும் அதில் இருந்து தப்பிக்க நாம் முயற்சித்து வருகின்றோம்.

உலகில் எங்கும் இல்லாத அளவில் இலங்கையில் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினர் இன அடிப்படையில் தெரிவு செய்ய வேண்டும் என்ற கொள்கையை உருவாக்கிக்கொடுத்தனர்.

ஒவ்வோர் இனத்தவருக்கும் தனித்தனியாக பிரித்து வைக்கப்பட்ட அரசியல் கொள்கை உருவாக்கப்பட்டது. இவ்வாறே ஜனநாயகம் எமது நாட்டில் உருவாக்கப்பட்டது.

இந்தக் கொள்கை வேறு எந்த நாட்டில் இருக்கின்றதா என்பது எனக்குத் தெரியாது. இந்த அரசியல் செயற்பாடே இலங்கையில் இளைஞர் கிளர்ச்சி, வடக்கு கிழக்கின் யுத்தம், இனவாத முரண்பாடுகள் அனைத்திற்கும் காரணமாக அமைந்தது.

சிறிய முரண்பாடுகள் என கருத்தி கைவிட்ட பிரச்சினைகள் இறுதியில் மிகப்பெரிய அழிவு வரையில் சென்றமையே உண்மையாகும். இன்றும் நாம் இனவாதத்தை அடிப்படையாக வைத்தே அரசியல் முன்னெடுத்து வருகின்றோம்.

எமது பிரிவினைவாத அரசியல் நகர்வுகளே இன்றுவரையில் தீர்வு ஒன்றை சிந்திக்க முடியாத நிலைமைக்கு தள்ளியுள்ளது. இவற்றில் இருந்து விரைவாக மீள வேண்டும். இப்போதும் இவை சாதாரண பிரச்சினைகள் என கருதினால் பெரிய அழிவையே நாடு எதிர்நோக்கும் என்பது திண்ணம்

புகழைத் தேடும் அரசியல் பயணம் நாட்டுக்கு ஒருபோதும் பொருந்தாது. ஆனால் இன்று இலங்கை இந்த நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதற்கு விருப்பு அரசியல் கொள்கையே பிரதான காரணமாகும். இன்று இலங்கையில் மூன்று அரசியல் செயற்பாடுகள் உள்ளன.

நாடாளுமன்ற அரசியல், மாகாணசபை அரசியல், பிரதேசசபை அரசியல் என மூன்று அரசியல் உள்ளன. ஆனால் இன்று அவை அனைத்தும் ஒன்றாக மாறியுள்ளன. இதில் இருந்து எம்மால் விடுபட முடியாத நிலையில் உள்ளோம்.

இப்போது இவற்றை மாற்றியமைக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது. இனவாதம் என்பதை விடுத்து இன ஐக்கியத்தில் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் முன்செல்ல வாய்ப்புகள் அமைந்துள்ளன. நாம் எமது நாட்டுக்காகவும். மக்களுக்காகவும், நாட்டின் வளங்களுக்கவும் அரசியல் செய்கின்றோம். இனிவரும் இளம் அரசியல் பரம்பரையும் இதனை கருத்தில் கொண்டு செயற்படவேண்டும் என்பதே எம் அனைவரதும் எதிர்பார்ப்பாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கிழக்குக்கு சிறந்த தமிழ்த் தலைமைத்துவம் கூட்டமைப்பால் உருவாக்கப்பட வேண்டும்!

## வலியுறுத்துகிறார் கோடீஸ்வரன் எம்.பி.



அம்பாறை, ஒக. 15

கிழக்கு மாகாணத்துக்கு சிறந்த தமிழ்த் தலைமைத்துவம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் உருவாக்கப்பட வேண்டும்.

-இவ்வாறு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை வீரமுனையில் 232 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் 27 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களுடைய உயிர்களைப் பறித்து, எமது இனத்தை அடியோடு இல்லாமல் செய்து விடலாம் என்ற சிந்தனையிலே வீரமுனை படுகொலை இடம்பெற்றது. இந்தச்சம்பவம் 27 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனாலும், அந்தப் படுகொலைகளுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை. இன்றுவரை எமது இனத்துக்கு நிரந்தரத் தீர்வும் கிடைக்க வில்லை. மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடியாத வர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் நல்லாட்சி நிலவ வேண்டும் என்று முஸ்லிம்களுக்கு முதலமைச்சர் பதவியை வழங்கப்பட்டது. ஆனால், அந்த முதலமைச்சர் சரியான பார்வையுடன் செயற்பட்டவர் அல்லர். எமது தமிழ் கிராமங்களைப் புறக் கணிக் கும் நிகழ்வுகள் இன்றும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

இனிவரும் காலங்களில் கிழக்கில் முதலமைச்சராக வருபவர் தமிழராக இருக்க வேண்டும். ஒரு தமிழரால்தான் தமிழ் மக்களுடைய வலிகளை உணர்ந்து செயற்பட வேண்டும். கிழக்கு மாகாணத்தில் இந்த மாற்றம் ஏற்பட வேண்டுமானால் தமிழர்கள் அனைவரும் ஒற்றிணைந்து செயற்பட வேண்டும். -என்றார். (ச)







செஞ்சோலை படுகொலைக்கு நீதி கோரலும் 11 ஆம் ஆண்டு நினைவேந்தலும் நிகழ்வும் மட்டக்களப்பில் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றுள்ளன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகியவற்றில் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வு, மட்டக்களப்பு கோப் சென்டர் மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை காலை 11 மணியளவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை விமானப் படையினரின் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட மாணவிகளின் உருவப் படங்களுக்கு தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச)

### சமுர்த்தி முத்திரைகள் நிறுத்தப்பட்டமையைக் கண்டித்து

# திருக்கோவில் பிரதேச செயலகம் பொது மக்களால் நேற்று முற்றுகை!





அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை, சமுர்த்தி முத்திரைகள் நிறுத்தப்பட்டமையைக் கண்டித்து பிரதேச செயலகத்தை பொது மக்கள் முற்றுகையிட்டனர்.

இந்தக் கூட்டம் இணைத் தலைவர்களின் தலைமையில் இடம்பெற்றுக்கொண்டி ருக்கும் போதே சுமார் 50 இற்கும் மேற்பட்ட மக்கள் ஆவேசத்துடன் சத்தமிட்டுக் கொண்டு அலுவலகத்துக்குள் நுழைந்துள்ளனர்.

இந்த நிலையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை இடைநிறுத்தி விட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் மக்களுடன் கலந்துரையாடினர்.

சமுர்த்தி முத்திரைகள் நிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப் படுகிறது . அவ்வாறு சிறுத்தப்பட்டால் பல்வேறு பாதிப்புகளை எதிர் நோக்க வேண்டி ஏற்படும் என மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இதற்கு திருக்கோவில் பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் பதில் அளித்தவை வருமாறு:-

''சமுர்த்தி பெறுபவர்களில் சிலர் வசதியானவர்களாகக் காணப்படுகின்றனர் என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கிடைத்துள்ள பயனாளிகளின் பட்டியலைச்சரிசெய்து சுற்றுநிருபத்துக்கு அமைவாக தகுதியான மக்களுக்கு முத்திரைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மாத்திரமே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தவிர, இதுவரையில் யாருடைய சமுர்த்தி கொடுப்பனவு முத்திரைகளும் நிறுத்தப்படவில்லை. ஏதும் முறைப்பாடுகள் இருப்பின் அதனை எழுத்து மூலம் வழங்குங்கள்''.-என்றார்.

இதனை அடுத்து, பொதுமக்கள் அங்கிருந்து களைந்து சென்றனர். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தொடந்தும் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# பொலிஸ் கொன்ஸ்டபிள் கர்பலாவில் சடலமாக மீட்பு!

மட்டக்களப்பு காத்தான்குடிப் பொலிஸ் பிரிவில் உள்ள கர்பலா பொலிஸ் சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரின் சடலம் நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

கந்தேவத்த கெத்தர முல்லையைச் சேர்ந்த எஸ்.திலகரத்ன (வயது-44) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

காலை வேளைக் கடமைக்காகச் சென்ற மற்றைய பொலிஸ்கொன்ஸ்டபிள் அவர் அசைவற்று இருந்தமையைக் கண்டு, அவரை எழுப்பிள்ளார். இதன்போதே அவர் உயிரிழந்தமை தெரியவந்துள்ளது.

மாரடைப்புக் காரணமாக மேற்படி பொலிஸ் கொன்ஸ்டபிள் உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவித்த காத்தான்குடி பொலிஸார், உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் மேலதிக விசாரணைகள் என்பனவற்றை மேற்கொண்டுள்ளனர்.

# ஹெரோயின் விநியோகிக்கும் ‘குடு ராஜா’ சிக்கினார்!

*மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பிரதேசங்களுக்கு ஹெரோயின் போதைப் பொருளை விநியோகித்து வரும் பொலன்னறுவை ‘குடு ராஜா’ என்றழைக்கப்படும் பொதிவெவ சுத்தா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இவருடன் 6 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்குத் தொடர்ச்சியாக போதைப் பொருளை விநியோகித்து வருபவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*கடற்படையில் இருந்து தப்பியோடிய இந்த நபருக்கு எதிராகப் போதைப் பொருள் தொடர்பில் ஏற்கனவே நீதிமன்றத்தில் 4 வழக்குகள் நிலுவையில் உள்ளன. ‘ஈசி கேஷ்’ முறையில் பணம் பெற்று இந்த நபர் வாடிக்கையாளர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு ஹெரோயினை விற்பனை செய்து வருகிறார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச)*

காலைக்கதிர் Kalaikkathir



## ஆவா குழுக்களுடன் தொடர்பில்லை!

# சிறிதரனின் குற்றச்சாட்டை நிராகரிக்கிறது இராணுவம்!

கொழும்பு, ஓக. 15

வடக்கில் செயற்படும் ஆவா போன்ற குழுக்களுடன் இராணுவத்துக்கு தொடர்பு இருக்கிறது என சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனிவிரத்ன நிராகரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஆவா போன்ற குற்றக் குழுக்கள், படைகளுடன் இணைந்தே செயற்படுகின்றன என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனிவிரத்ன கருத்து வெளியிடுகையில்–



இதுபோன்ற குழுக்களை உருவாக்க வேண்டிய தேவை இராணுவத்துக்கு கிடையாது.

சட்டம் ஒழுங்கைப் பேணுவது எமது பாதுகாப்புத் துறையின் கடமையாகும்.

சிறிதரனின் இந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது. இந்தக் குழுக்களுடன் நாங்கள் எந்த தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை என்று கூறியுள்ளார்.

இதேவேளை, கடந்த 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர், படையினரே தமது நிகழ்ச்சி நிரலுக்காக இந்தக் குற்றக் குழுக்களை உருவாக்கினார்கள். பயங்கரவாதத்தின் நிழல் இப்போது நாட்டைச் சூழ்வது போன்ற கருத்து உருவாக்கப்பட்டுள்ளது.

அவர்கள் படையினருடன் இணைந்தே செயற்படுகின்



றனர். தம்முடன் இணைந்து செயற்படுபவர்களை இவர்களால் ஏன் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளது. அரசு இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, இந்தக் குழுக்களின் இயக்கம் மற்றும் செயற்பாடுகள் விசாரணைகளின் மூலம் வெளிப்படும் என்று பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர கூறியுள்ளார்.

இதனிடையே வடக்கில் சட்டவிரோத மண் அகழ்வு, போதைப்பொருள் கடத்தலை தடுப்பதற்கு, கடலோரக் காவல் படையினருடன் இணைந்து, கண்காணிப்பைத் தீவிரப் படுத்தியுள்ளோம் என கடற்படைப் பேச்சாளர் லெப். கொமாண்டர் சமிந்த வலகுலுகே தெரிவித்துள்ளார். (க)

## கொழும்பை அச்சுறுத்தி வந்த மர்மக் கும்பல் கண்டுபிடிப்பு!

### பொலிஸ் விசேட அதிரடிப் படை தகவல்

கொழும்பு, ஓக. 15

நீர்கொழும்பு, கொழும்பு உள்ளிட்ட நகரங்களில் பெரிய கொள்ளைகள் மற்றும் குற்றங்களில் ஈடுபட்டிருந்த குழு தொடர்பில் முதன்முறையாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

நீர்கொழும்பு புத்தளம் வீதி குரண பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற் கொண்ட சுற்றிவளைப்பில் காயமடைந்த இருவர் தற்போது தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அங்கொட லொக்கா மற்றும் மாகந்துரே மதுஷின் ஆதரவாளர்கள் இருவர் வெளியிட்ட தகவல்களுக்கமைய இந்த நடமாடும் கொள்ளைக் குழு தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன என விசேட அதிரடிப் படையின் சிரேஷ்ட அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

10 லட்சம் ரூபாவுக்கு அதிகமான பணம் கொண்டு வரும் எந்தவொரு நபர் தொடர்பிலும் இந்த குழுவுக்கு தகவல் கிடைத்து விடும்.

அதற்கமைய வாகனத்தில் நடமாடும் இந்த குழுவினர் உரிய நேரத்தில் அந்த இடத்திற்குச் சென்று அந்த பணத்தை கொள்ளையடித்து விட்டு வாகனத்தின் இலக்கத் தகட்டை மாற்றி விட்டு தப்பி சென்று விடுகின்றனர்.

இந்த நடமாடும் கொள்ளை குழுவிற்கு துப்பு வழங்குவர்கள் பெரியளவு பணப் புழக்கமுள்ள இடங்களில் பணியில் இருப்பவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

## 20 ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிர்ப்பு; மஹிந்த தேசப்பிரியவின் கடிதமே காரணமாம்!



அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்பை வெளியிட்டமைக்கு, தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய எழுதிய கடிதமே காரணமாக இருந்தது என்று கூறப்படுகிறது.

மாகாணசபைத் தேர்தலை ஒரே நாளில் நடத்தும் வகையில், 20 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான தீர்மானம் அமைச்சரவையில் ஒருமனதாக எடுக்கப்பட்டு, தீர்மானமாக அது நிறைவேற்றப்பட்டு வர்த்தமானியும் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும், கடந்தவாரம் நடந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில், இந்தத் திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராகத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் மஹிந்த தேசப்பிரிய கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அதில் மாகாணசபைத் தேர்தல்களைப் பிற்போட வேண்டாம் என்றும், அது அரசமைப்பு மீறலாக இருக்கும் என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்தே, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில், 20 ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிரான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவு இன்று நடக்கவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் ரத்துச் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## ஜனவரியில் தனித்து ஆட்சியமைக்க தயாராகிறது ஐக்கிய தேசியக் கட்சி!

கொழும்பு, ஓக. 15

அடுத்த ஆண்டில், கூட்டு அரசில் இருந்து வெளியேறி தனித்து ஆட்சி அமைப்பது குறித்து, ஐக்கிய தேசியக் கட்சி ஆலோசித்து வருகிறது என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அண்மைய சில செயற்பாடுகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது கூட்டு எதிரணியின் தூண்டுதலின் பேரில், அவ்வாறு நடந்து கொள்கிறது என ஐ.தே.க. சந்தேகிக்கிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நாட்டின் அரசியல் நிலைவரங்கள் தொடர்பாக, கலந்துரையாடியுள்ளனர்.

ஒரே கூட்டு அரசில் இருந்தாலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பலரும், ஐ.தே.கவை தாக்கி வருகின்றனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஐ.தே.க. தொடர்ந்து கூட்டணி வைத்துக் கொண்டால், தாம் பதவி விலகுவோம் என்று ஐ.தே.க . அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் சிலர், எச்சரித்துள்ளனர் என்றும் அறியப்படுகிறது.

இந்த நிலையிலேயே, டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து அமைத்து கூட்டு அரசில் இருந்து விலகி, தனித்து ஆட்சியமைப்பது குறித்து ஐ.தே.க. ஆலோசித்து வருகிறது என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## யாழ் – கொழும்புக்குப் பயணித்த பஸ் மீது கல்வீச்சுத் தாக்குதல்

யாழ்ப்பாணத்திலிருந்து, கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் மீது கல்வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு பளைப்பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், தனியார் பஸ்ஸில் பயணித்த நபர் ஒருவரே இந்த தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளார் எனப் பளை பொலிஸார் கூறியுள்ளனர்.

இருப்பினும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுஎனவும்பளைபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, யாழில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸை தனியார் பஸ் ஒன்று முந்தி செல்ல விடாமல் போட்டி போட்டு பயணித்தமையால் பயணிகள் சிரமத்தை எதிர்நோக்கியது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு அனுமதி

## பதிவுகள் செப்ரெம்பர் 6 முதல்

யாழ்ப்பாணம், ஓக. 15

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஈராண்டு பயிற்சியை மேற்கொள்வதற்காக 2017- 2018 கல்வியாண்டுக்கான ஆசிரிய மாணவர்களின் பெயர் விவரங்கள் கலாசாலைக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவர்களுக்கான பதிவுகள் எதிர்வரும் செப்ரெம்பர் 6 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கின்றமையால் சகலரும் அன்றைய தினம் தங்கள் பதிவுகளை மேற்கொண்டு தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட அனுமதிக்கப்படவுள்ளனர்.

கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரிய மாணவருக்கான அனுமதிக் கடிதம் தபாலிடப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் பாடசாலை விடுகை அனுமதியோடு கலாசாலைக்கு வருகை தர வேண்டும். ஆரம்பக்கல்வி, சங்கீதம், இந்து சமயம், கணிதம், விவசாயம், வர்த்தகம், சிறப்புக்கல்வி மற்றும் மனைப் பொருளியல் ஆகிய பாடங்களுக்கு மட்டுப் படுத்தப்பட்டுள்ள ஆசிரிய மாணவர்களே அனுமதிக்கப் பட்டுள்ளனர் என்று கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தெரிவித்துள்ளார். (ப)

# நீதித்துறை மீது பொய்யாக குற்றம் சுமத்தி தொடர்ந்தும் தவறிழைக்கின்றார் மஹிந்தா!



## சாடுகிறார் காவிந்த ஜயவர்தன எம்.பி.

இந்த நாட்டின் நீதித்துறை மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் சுமத்தி வருகின்றார்.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துக் கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல்வாதிகள் நீதிமன்றத் துக்குச் செல்லும் போது சட்டம் சிறப்பாக செயற்படுகிறது என்று கூறும் மஹிந்த ராஜ பக்ஷ, தமது தரப்பினர் நீதி மன்றத்துக்கு செல்லும் போது சட்டம் தவறாகச் செயற்படு கிறது எனக் கூறுகிறார். ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக அவர் குழப்பமடையத் தேவையில்லை.

இதேவேளை, இலங்கை சுதந்திரக் கட்சியின் முக்கிய அமைச்சர் ஒருவர் பசில் ராஜ பக்ஷ மீதான குற்றச்சாட்டைத் தெளிவாக முன்வைத்துள்ளார். இந்த நிலையில், அவரிடம் கூட்டு எதிர்க்கட்சியை ஒப் படைத்துள்ளமை ஆச்சரியத் திற்குரியது.

மேலும், மஹிந்த ராஜபக்ஷ முதலில் குடும்பத்திலும், கட்சியிலும் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் நாட்டில் இடம்பெறும் பிரச்சினைகள் தொடர்பில் பேசலாம்- என்றார். (ச)

## தினசரி ராசி பலன் 15.08.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 31 ஆம் நாள் அஷ்டமித்திதி மாலை 5.40 மணி வரை. பின்னர் நவமி. நட்சத்திரம்: கார்த்திகை பி.இ. 2.30 மணி வரை. பின்னர் ரோகினி. சித்தாமிர்தயோகம் முழுவதும். ராகுகாலம் மாலை 3.20 மணி முதல் 4.53 மணி வரை. சுபநேரம்: பகல் 10.35 மணி முதல் 10.05 மணி வரை. இன்று கார்த்திகை விரதம். திவசம் செய்யவேண்டிய திதி: ஆடி மாத தேய்பிறை அஷ்டமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: கார்த்திகை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்** : நன்மையான நாள். குடும்பத்தில் சுப காரியங்கள் நடந்தேறும். தொழில் வியாபாரத்தில் புதிய உற்சாகமும், மேன்மையும் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த நன்மைகள் அமையும்.

**ரிஷபம்**: ஆக்கபூர்வமான நாள். எடுத்த காரியங்களை திட்டமிட்டு வெற்றியுடன் செய்து முடிப்பார்கள். பணவரவு நிம்மதி அளிக்கும். வெளிநாட்டு உறவால் எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**மிதுனம்**: குழப்பமான நாள். தனவரவு குறையும். குடும்பத்தில் பிறர் தலையீடு புதிய சிக்கலை உருவாக்கும். தொழில் வர்த்தகத்தில் கஷ்டங்களைச் சந்திக்க நேரிடும்.

**கடகம்** : யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். வேலை எதிர்பார்ப்பவர்களுக்கு வேலை கிடைக்கும். மகிழ்ச்சி நிலவும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

**சிம்மம்**:சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு தேவையற்ற இடமாற்றத்தால் கஷ்ட நட்டங்கள் ஏற்படும்.

**கன்னி**: உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானத்தில் உயர்வும், வீட்டில் கருத்து ஒற்றுமையும் இருந்து வரும். குடும்பத்தில் தடைப்பட்ட காரியம் நடைபெறும்.

**துலாம்** : கவலையான நாள். முயற்சிக்கும் காரியங்களில் தடைகள் உண்டாகும். வியாபாரத்தில் போட்டியால் கஷ்டநட்டங்களை ஏற்க நேரிடும்.

**விருச்சிகம்** : சமபலன்கள் காணப்படுகின்றன. உத்தியோகத்தர்கள் தேவையற்ற பிரச்சினைகளில் மாட்டிக் கொள்ளநேரும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**தனுசு** : ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. நினைத்த காரியம் வெற்றிகரமாக முடியும். வியாபாரிகளுக்கு புதிய கிளைகள் தொடங்குதல் போன்ற சிறப்புநிலைகள் உண்டாகி விருத்தியாகும்.

**மகரம்** : குழப்பமான நாள். எதிலும் நிதானமாக நடக்க வேண்டிவரும். பேச்சுவார்த்தைகள் அளவோடு இருக்க வேண்டும். குடும்பத்தில் சஞ்சலநிலை காணப்படும்.

**கும்பம்** : சமபலன்கள் காணப்படுகின்றன. குடும்ப உறவில் விரிசல் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு தொல்லைகளும், சோதனைகளும் உண்டாகி விலகும்.

**மீனம்** : சுபீட்சமான நாள். வீடு, வாகன, ஆபரணச் சேர்க்கையும், விருத்தியும் உண்டாகும். சிலருக்கு பூர்விக சொத்து சேர்க்கை உண்டாகும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும்.

சந்திராட்டமநாள்: சித்திரை 3, 4 சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# அமெரிக்கா செல்கிறார் ஜனாதிபதி மைத்திரி!



கொழும்பு, ஓக. 15

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தின் 72 ஆவது அமர்வு செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில், 19 ஆம் திகதி ஜனாதிபதி கலந்துகொள்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றமையின் பின்னர், அவர் கலந்து கொள்ளும் 3 ஆவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இந்தநிலையில், ஜனாதிபதி சில முக்கிய அரச தலைவர்களுடனும் பேச்சுகளில் ஈடுபடவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# இன்று கொடியேற்றம்

வல்வெட்டித்துறை, ஓக.15

வல்வெட்டித்துறை வன்னிச்சி ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (இ)

# தென்மராட்சியில் நாளை ஓவியக் கண்காட்சி

தென்மராட்சி, ஓக. 15

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் சித்திர பாட மாணவர்களால் வரையப்பட்ட ஓவியங்களின் காட்சிப்படுத்தல் நிகழ்வு நாளை புதன்கிழமை தென்மராட்சி கலாமன்றக் கலாசார மண்டபத்தில் இடம்பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் வலய அழகியற் பாடப் பிரிவினர் இதனை ஏற்பாடு செய்துள்ளனர். இந்தக் கண்காட்சியில் வலயத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் கை வண்ணத்தில் உருவாக்கப்பட்ட சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓவியங்கள் காட்சிப்படுத்தப் படவுள்ளன. (ப)

# வவுனியா கோவிற்குளத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு!


வவுனியா, ஓக. 15

வவுனியா கோவிற்குளம் பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் இருந்து சடலம் ஒன்று நேற்று மீட்கப் பட்டது என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, கோவிற் குளம் பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியின் மது பானசாலை பகுதியில் கடமையாற்றும் மூன்று பிள்ளைகளின் தந்தையான அலேசு அருளப்பு (வயது 58) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணியளவில் அவரது கடமைகளை முடித்து விட்டு இந்த விடுதியில் தங்கியுள்ளார்.

மறுநாள் காலை விடுதி அறைக்கு சக ஊழியர் ஒருவர் சென்ற சமயத்தில் கதிரையில் இறந்த நிலையில் காணப் பட்டுள்ளார்.



உடனடியாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர் திடீரென நோய்வாய்ப்பட்டு இறந்திருக்கலாம் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து தெரிய வருகின்றது. (க-100)

# சின்மயா மிஷனில் ஸ்ரீகிருஷ்ணரின் அவதார தினம்

யாழ்ப்பாணம், ஓக. 15

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் அவதார தினத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி முதல் 5 மணி வரை யாழ்ப்பாணம் சின்மயா மிஷனில் பாதுஹா பூஜை, பஜனை, ஆராதனை மற்றும் பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன் யாவின் சத்சங்கம் என்பன இடம்பெறவுள்ளன.

இல. 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் சின்மய ஞான வேல் ஆச்சிரமத்தில் நிகழ்வு நடைபெறும். இதில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ப)

# இந்திய மாக்கடலில் ஆதிக்கம் செலுத்த பிரயத்தனம்

# வல்லரசு நாடுகளின் போட்டிக்கு நடுவில் சிக்கியுள்ள சிறிலங்கா!

வழிமூலம்- sunday times
ஆங்கிலத்தில் - Latheef Farook
மொழியாக்கம்- நித்தியபாரதி

இந்திய மாக்கடலில் சீனா தனது கடல் போக்குவரத்தைப் பாதுகாப்பதற்கும் ஆபிரிக்காவுடனான வளர்ந்து வரும் தனது வர்த்தகத்தை உறுதிப்படுத்தவும் தடங்கலுமற்ற பெற்றோலிய வழங்கலை உறுதிப்படுத்துவதற்கும் சீனாவுக்கு அம்பாந்தோட்டைத் துறைமுகம் தேவைப்படுகிறது.

எனினும் இலங்கையைப் பொறுத்தளவில் இது அடுத்து வரும் தலைமுறையினர் வரை தொடரக்கூடிய பேரழிவாக உள்ளது.

இலங்கை போன்ற நீண்ட கால யுத்தம் இடம்பெற்ற நாடொன்றில் அரசியல்வாதிகள் ஊழல் மோசடிகளில் ஈடுபடுகின்றமையுடன் அதிகாரத்துவ ஊழலிலும் ஈடுபடுகின்றனர். அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம் பல பில்லியன் டொலர்கடனில் மேற்கொள்ளப்பட்டதுடன் இது அவசியமற்றதொரு திட்டமாகவும் நாட்டின் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் திட்டமாகவும் காணப்படுகிறது.

1979 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம், அமெரிக்காவின் தலைமையிலான மேற்குலக நாடுகள் மத்திய கிழக்குடன் யுத்தம் புரிவதில் தீவிரம் காண்பித்தன. ஆபிரிக்க நாடுகளுடன் பல்வேறு உடன்படிக்கைகளை மேற்கொண்டதன் மூலமும் சீனா தனது உற்பத்திகளை விற்பதற்கான சந்தை வாய்ப்புக்களைத் தேடிக் கொண்டதற்கும் அப்பால் ஆபிரிக்காவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்ததன் மூலம் சீனா ஆபிரிக்க நாடுகளுக்குள் நுழைய ஆரம்பித்த அதே வேளையில் பெரியதொரு ஸ்ரேலை உருவாக்குவதே இந்த யுத்தத்தின் நோக்காக இருந்தது.

### இந்திய மாக்கடலின் முக்கியத்துவம்

இதன் விளைவாக, ஆபிரிக்காவுடனான ஸ்ரேலின் வர்த்தகம் 2002 இல் பத்து பில்லியன் டொலர்கள் வரை அதிகரித்ததுடன் 2006 இல் இந்தத் தொகை 200 பில்லியன் டொலர்களாக அதிகரித்தது. சீனாவின் நான்கு ரில்லியன் டொலர் வர்த்தகப் பொருள்கள் மற்றும் நாளாந்தம் ஏழு மில்லியன் பரல்கள் பெற்றோலியமும் இந்திய மாக்கடலின் ஊடாகவே கொண்டு செல்லப்பட்டது. இதனால் இந்திய மாக்கடல் சீனாவுக்கு மிகவும் அவசியமான ஒன்றாக உள்ளது.

எனினும், மலாக்கா நீரிணையை விரோத சக்திகள் தடைசெய்து விடுவார்களோ என்கின்ற அச்சம் சீனாவிற்கு உள்ளது. இதனால் சீனா தனது நீண்ட கால விசுவாசத்திற்குரிய நட்பு நாடான பாகிஸ்தானுடனான உறவை மேலும் பலப்படுத்தியுள்ளதுடன் இந்திய மாக்கடலின் ஊடாக மாற்று வர்த்தகப் பாதையையும் உருவாக்கத் தொடங்கியுள்ளது. இதற்காக சீன-பாகிஸ்தான் பொருளாதாரப் பாதைத் திட்டத்தின் கீழ் 46 பில்லியன் டொலர் செலவிடப்படவுள்ளது.

இத்திட்டம் சீனா மற்றும் பாகிஸ்தானை விரைவான கடல் பாதையின் ஊடாகத் தொடர்புபடுத்துகிறது. இத்திட்டத்தின் கீழ் சீனா தெற்குப் பட்டுப்பாதை, மத்திய ஆசியப்பட்டுப் பாதை, 21 ஆம் நூற்றாண்டிற்கான கடலோரப் பட்டுப் பாதை மற்றும் சீன-பாகிஸ்தான் பொருளாதாரப் பாதை போன்ற திட்டங்களை ஒன்றிணைத்து வலைப்பின்னல் நிகழ்ச்சித்திட்டத்தை மேற் கொண்டு வருகிறது.

இது சீனாவின் ஓர் அணை, ஒரு பாதை எண்ணக்கருவிற்கு முக்கியமானதாகவும் ஆசிய மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த 60 நாடுகளை இணைக்கும் திட்டத்தையும் கொண்டுள்ளது.

இதில் சில திட்டங்கள் மூலோபாய முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன. குறிப்பாக பேர்சியன் வளைகுடாவில் பாகிஸ்தானின் குவடார் துறைமுகத்தைச் சீனாவின் சின்ஜியாங் பிராந்தியத்தை பெரும் நெடுஞ்சாலை மற்றும் தொடருந்துப் பாதைகளின் வலைப்பின்னலின் ஊடாகத் தொடர்பு படுத்தும் மூலோபாய முக்கியத்துவத்தை சீனா கொண்டுள்ளது. இதன் மூலம் துறைமுகங்கள், கட்டுமானத் திட்டங்கள் போன்றவற்றைப் பயன் படுத்துவதுடன் பெற்றோலிய மற்றும் எரிவாயுக் குழாய்களை ஏற்றுமதி செய்வதும் சீனாவின் நோக்கமாகும்.

> இந்திய மாக்கடல் மீதான இந்தியக் கடற்படையின் செல்வாக்கிற்கு இணையாகத் தனது செல்வாக்கை நிலைநிறுத்துவதற்காக சீனா பல மாற்றுப் பாதைகளை அமைத்து வருகிறது. அமெரிக்கா மற்றும் சீனாவிற்கு அடுத்ததாக உலகின் மிகப் பெரிய மூன்றாவது நாடாக வளர்ந்து வரும் இந்தியா, இந்திய மாக்கடல் மீதான சீனாவின் செல்வாக்கை முறியடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.




இது ஒரு தரைத் தொடர்புப் பாதையாகும். இதன் மூலம் விரைவான போக்குவரத்தையும் மேற்கொள்ள முடியும். குறிப்பாக 10 ஆயிரம் கிலோமீற்றர் தொலைவிலுள்ள வளைகுடாச் சந்தைக்கான போக்குவரத்து சீனாவிற்கு இலகுவாக்கப்படுவதுடன் இப்பிராந்தியத்தின் பூகோள - அரசியலிலும் மாற்றம் ஏற்படுத்தப்படும்.

சோவியத் யூனியன் ஏன் தனது படையை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பியது என்பதற்கான முக்கிய காரணம் என்ன என்பதை எவரும் மறந்துவிட முடியாது. அதாவது பேர்சியன் வளைகுடாவில் தனது செல்வாக்கை நிலைநிறுத்துவதே சோவியத் யூனியனின் நோக்காக இருந்தது. இதேபோன்றே சீனாவும் தனது சொந்த மூலோபாயத்தை நிலைநிறுத்துவதற்காகவே இந்திய மாக்கடலில் தனது செல்வாக்கை நிலைநிறுத்தி வருகிறது.



### இலங்கையில் சீனா கண் வைக்கக் காரணம்

இதற்காக இந்திய மாக்கடலில் அமைந்துள்ள பாகிஸ்தான், இலங்கை மற்றும் பங்களாதேஸ் போன்ற தனது நட்பு நாடுகளின் துறைமுக அபிவிருத்தியில் சீனா பங்கெடுத்துள்ளது. இதற்காகவே சீனா, இலங்கையின் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் தனது அதிகாரத்தைச் செலுத்த முற்படுகிறது. இதற்காக இலங்கையர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

தாய்லாந்தின் க்ராவிலுள்ள இஸ்த்மஸ்ஸிற்குக் குறுக்காக கால்வாய் ஒன்றை அமைப்பதற்கான திட்டத்தை சீனா கொண்டுள்ளது. இதன்மூலம் இந்திய மாக்கடலுடன் சீனாவின் பசுபிக் கரையோரத்தை இணைத்து பனாமா கால்வாயுடன் இணைப்பை ஏற்படுத்த முடியும் என சீனா திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஆசியா மீதான தனது இருப்பை சமப்படுத்திக் கொள்ள முடியும் என சீனா கருதுகிறது.

அத்துடன் சீனா தனது கடற்படையின் நடவடிக்கையை இந்திய மாக்கடலில் விரிவுபடுத்துவதுடன் கிழக்கு ஆபிரிக்கா தொடக்கம் ஜப்பான் மற்றும் கொரியக் குடாநாடு வரை தனது வர்த்தக நகர்வுகளையும் விரிவுபடுத்த முடியும் எனக் கருதுகிறது. இதேபோன்று இந்திய மாக்கடல் பிராந்திய நாடுகளுக்கு சீனா தொடர்ந்தும் பல்வேறு உதவிகளை வழங்குவதுடன் பல்வேறு வர்த்தக மற்றும் பாதுகாப்பு உடன்படிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. இதுவும் சீனா தனது மூலோபாய இலக்குகளை அடைவதற்கான ஒரு வழியாகும்.

### சீனாவின் செல்வாக்கை முறியடிக்கும் முயற்சி

இந்திய மாக்கடல் மீதான இந்தியக் கடற்படையின் செல்வாக்கிற்கு இணையாகத் தனது செல்வாக்கை நிலைநிறுத்துவதற்காக சீனா பல மாற்றுப் பாதைகளை அமைத்து வருகிறது. அமெரிக்கா மற்றும் சீனாவிற்கு அடுத்ததாக உலகின் மிகப் பெரிய மூன்றாவது நாடாக வளர்ந்து வரும் இந்தியா, இந்திய மாக்கடல் மீதான சீனாவின் செல்வாக்கை முறியடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

இதனால் இந்தியக் கடற்படையின் நடவடிக்கைகளை முறியடிக்கும் விதமாக சீனா பல மாற்றுப் போக்குவரத்துப் பாதைகளை அமைத்து வருகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க... )



இந்தியாவின் 70 ஆவது சுதந்திர தினம் இன்றாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

# சுதந்திரம் கிடைத்தால் மட்டும் போதுமா?

**பண பலம், அதிகாரம் இருப்பவர்களுக்கே சமுதாயத்தில் அங்கீகாரம், மரியாதை!**

**1947** ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி பிரித்தானிய ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்து இந்தியா சுதந்திர நாடாகியது.

சுதந்திரம் என்ற ஒற்றை வார்த்தை ஒட்டு மொத்த பூமியின் புரட்சி வார்த்தையாக வரலாற்றின் பக்கங்களில் எல்லாம் ஆக்ரோஷ கோணத்தில் எப்போதும் வெளிப்பட்டிருக்கிறது. அடக்குதலும் அத்து மீறலும் காலம் காலமாக மனிதர்களுக்குள் நிகழும் ஒரு வழமை. இயல்பிலேயே சுதந்திரமான ஓர் உயிர்க் கூட்டம் மனமென்னும் சிறைக் குள் அடைப்பட்டு சக மனிதரை ஆளுமை செய்ய நினைத்து திட்டங்களைத் தீட்டி வியாபரமென்றும், போர்களென்றும், படைகளென்றும் தமது நகர்வுகளை முன்னெடுத்து மனிதன் மனிதனை ஆளுமை செய்யும் தந்திரம் சமைக்கப்பட்டது.

கீழை நாடு என்று வர்ணிக்கப்படும் இந்திய தேசத்தின் வேர்கள் ஆன்மீகத்தில் ஊறிப்போனவை, இந்திய துணைக் கண்டத்தில்தான் மனிதன் தன்னுள் ஆழ்ந்து அமிழ்ந்து சத்தியத்தின் உண்மைகளை கண்டறியும் விஞ்ஞானம் சமைத்தான் அதனை ஆன்மீகம் என்ற பதம் கொண்டு பொதுவிலே பகிர்ந்து வைத்தான்.

இயற்கையில் புறம் நோக்கிய பாய்ச்சலில் அத்தனை அவசியங்கள் அற்று தனது வலிமையையும் அதிகாரத்தையும் அவன் செலுத்த விரும்பியமை எல்லாம் தமது கலாசாரத்தையும், ஆன்மீக பலத்தையும் உலகுக்கு எடுத்துக் காட்டல் மற்றும் புதிய கலாசார தெளிவுகளைக் கற்றல் என்ற இரு விடயங்களுக்காகத்தானே அன்றி ஆளுமைக்கும் அடக்கி ஆளுதலுக்குமாய் எப்போதும் இருந்ததில்லை.

இந்தியரைப் பொறுத்தவரை எதிரிகள் என்றால் போர் மரபுப்படி கட்டியம் கூறி வாளேந்தி களம் காண வர வேண்டும் அல்லது விருந்தினராய், நண்பராய் நட்புப் பாராட்டி வர வேண்டும் என்ற இரு சூழல்களுக்கே பெரும்பாலும் பழக்கப்பட்டிருந்தமை யால் வெள்ளை உடலும் கள்ள மனமும் கொண்டு வணிகம் என்ற பெயரில் கிழக்கிந்திய கம்பெனி என்ற விலாசத்தோடு தேசத்திற்குள் நுழைந்தவர்களின் ஆதிக்க, ஏகாதிபத்திய மனோ நிலையை எடைப் போட்டுப் பார்க்கும் திரணியை தொலைத்து விட்டிருந்தனர்.

காலம் எப்போதும் எதிர்முனையில் இருக்கும் எல்லாவற்றையும் வசீகரித்துக் காட்டும் ,கூடவே கவர்ச்சியும் மிகைப்பட்டுப் போயிருந்தால் புத்தியையும் கிறுகிறுக்க வைக்கும். எப்போதும் தத்தம் வாழ்க்கையில் திருப்தியாய் இருந்த இந்தியர்களிடம் ஆங்கிலேய கவர்ச்சி அரசியலும், குள்ள நரிப் புத்திகளின் பிரித்தாளும் சூழ்ச்சிகளும் வெகு விமரிசையாகவே வெற்றி வாகை சூடியது. இதன் காரணமாக வெள்ளையனை மேலேற்றி விட்டு சக தேசத்தவனை போட்டுக் கொடுக்கும் காழ்ப்புணர்ச்சி அரசியலில் சிக்கி சின்னா பின்னமானான் இந்திய தேசத்தவன்.

வீறு கொண்ட வேங்கைகளாய் எதிரிகளை போரிட்டு வென்ற இந்திய நாட்டின் மாமன்னர்கள் முதன் முதலாய் ஒரு துரோகியை, கபடதாரியை எதிர்கொண்டு போரிட களமிறங்கிய போது சதி வேலைகளாலும் மிகைப்பட்ட நவீன ஆயுதங்களாலும் ஒவ்வொரு மன்னனாய் மண்ணில் சாய்த்துப் போட்டான் வெள்ளையன். இந்திய தேசத்தில் சுதந்திர போரட்டத்தின் முதற்குரலாய் சிவகங்கைச் சீமையில் மன்னர் முத்து வடுக நாத சேதுபதி சிம்மக் குரல் எழுப்பி ''...எம் மண்ணை ஆள எம்மிடமா கேட்கிறாய் வரி...''

'' வரி என்று வாய் திறந்தால் அது கிழிக்கப்படும் '' என்று எக்களமிட்டான்.

காலம் சூழ்ச்சி வலைகளை விரித்து அம்மன்னனையும், இந்திய சுதந்திர போராட்டத்தில் வெள்ளையனை எதிர்த்த முதல் பெண்மணி வீரமங்கை வேலு நாச்சியாரையும், மருது பாண்டியர்களையும், வீர பாண்டிய கட்டப்பொம்மன் புலித்தேவன், வீரன் சுந்தரலிங்கனார், என்று சரமாரியாக தமிழ் நாட்டு மண்ணிலிருந்து புறப்பட்ட வேங்கை களின் செங்குருதிகளை எல்லாம் காவு வாங்கிக் கொண்டது.

குள்ள நரிப் புத்திக்கொண்ட வெள்ளையனை எதிர்க்க கொஞ்சம் மேலை நாட்டு புத்தியும் யுத்தியும் தேவைப் பட்டது இந்திய மக்களுக்கு ஆனால், அது இல்லாததாலேயே...., இந்திய தேசம் தோறும் வெள்ளையனை எதிர்த்து தூக்கப்பட்ட வாள்களுக்கு பலியாய் அந்த அந்த மண்ணின் மைந்தர்களின் தலைகள் பலியாய் எடுக்கப் பட்டது.

நாட்டு வளங்களைச் சுரண்டி இங்கிலாந்துக்கு அனுப்பிக் கொண்டிருந்ததோடு மட்டும் நின்று விடாமல், இந்தியர்களை எல்லாம் கேலிப் பொருள்களாக்கி, அவனின் புறம் நோக்கிய தேடலில் கண்டுபிடித்த பொருள்களை எல்லாம் கடை விரித்து தன்னை நவ நாகரிக மனிதனாக காட் டிக் கொண்டு தாழ்வு மனப்பான்மையை திணித்து ஒரு மனோதத்துவ தாக்குதலையும் அவன் நடத்த தவறவில்லை.

### சூரிய தேவன் காந்தி அவதரித்தார்

இவ்வாறான பெரும்சோதனை வேளையில் உதித்த சூரியன் தான் ''மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி''

உன்னை அடித்தால் எதிர்த்து திருப்பி அடி, சண்டையிடு, கிளர்ச்சி செய், துப்பாக்கி ஏந்திப் போராடு என்றெல்லாம் உலகம் போதித்து வந்த வழமையான வழிமுறைகளை உடைத்தெறிந்தவர். ஏ... மனிதா! உன் அடக்குமுறையால் எம்மையும் எம் மக்களையும் மிதிக்கிறாயா? மிதித்து மிதித்து உனது கால்களில் கொஞ்சமேனும் வலியேறியிருக்குமே....அப்போதாவது எமது வலி என்ன என்று சிந்தித்துப் பார்...என்று தனது மௌனத்தால் போதித்த புயல்தான் மகாத்மா என்னும் மாமனிதர்.

நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் என்னும் சகாப்த புருசர் மகாத்மாவிற்கு சற்றும் சளைத்தவர் அல்லர். கடும் போராட்ட வடிவங்களை வைத்துக் கொண்டு இந்திய தேசிய இராணுவத்தை கட்டமைத்து, ஆயுத பலத்தால் வெள்ளையனை விரட்டலாம் என்று அவர் எடுத்த முடிவு சரியானதுதான் ஆனால், காலத்தின் போக்கில் ஆயுதங்கள் செய்வதையே வழமையாகவும், மக்களை அடக்கி ஆள்வதே தனது வாழ்க்கையாகவும், கொள்கையாகவும் கொண்டிருந்த வெள்ளையனை அது ஸ்தம்பிக்கச் செய்யவில்லை மாறாக அவன் தெரிந்து வைத்திருந்த யுத்த வழிமுறைகளால் வென்று போடவே செய்தது.

காலத்தின் போக்கில் சுயநல அரசியலும், கபட புத்தித் தலைவர்களும் சேர்ந்து தியாகங்களை தீக்கிரையாக்கி விட்டு தங்கள் பகட்டு வாழ்க்கைக்கு பட்டு நூலில் காவியம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு தேசத்தில் சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் அத்தனை பேருக்கும் சுதந்திரம் என்றால் என்ன? உரிமைகள் என்றால் என்ன? நமது வாழ்க்கை முறை எப்படி இருக்கிறது ? என்றெல்லாம் முழுதாய் உணர்தலுக்கு சற்றும் சாத்தியமற்ற சூழலே நிலவுகிறது.

### ஒவ்வோர் இந்தியரும்....

பக்கத்து தேசத்தில் சுதந்திரத்துக்குப் பின்னாலும் தெளிவற்ற பார்வைகள் கொண்ட தலைவர்களால் சின்னா பின்னப் பட்டுக் கிடக்கும் நமது சகோதரனைக் கேட்டுப் பாருங்கள்....சுதந்திரம் என்றால் என்னவென்று...?

இந்திய தேசத்தின் காலடியில் கிடக்கும் தேசத்தில் லட்சோப லட்சமாய் முள் கம்பிகளுக்குள் வசிக்கும் நம் தொப்புள் கொடி உறவுகளைக் கேட்டால் தெரியும் சுதந்திரம் என்றாலென்ன என்று?

நினைத்த இடத்தில் காறி உமிழவும், பார்க்குமிடத்திலெல்லாம் தெருவோரத்தில் சிறுநீர் கழிக்கவும், யாரைப் பற்றி வேண்டுமானாலும் யார் வேண்டுமானலும் எது வேண்டுமானாலும் அத்து மீறி பேசவும், வன்முறைகள் செய்யவும், காவல்துறை மற்றும் நீதித் துறையை மதிக்காமல் தத்தம் ஆள், பண அதிகார பலத்தால் எல்லாவற்றையும் கட்டிப் போட்டு வன்முறைகள் செய்யவும், இலஞ்சம் வாங்கவும், ஊழல் செய்யவும், தத்தம் சந்ததியினரை மட்டுமே குறுக்கு வழிகளில் வளர்த்து விடவும்,

பணத்தைப் பெற்றுக் கொண்டு பிணத்தைப் போல தேர்தலில் வாக்குகளை விற்கவும் எப்போதும் யாரையாவது குறைகள் சொல்லி கறைகளோடு தத் தம் சட்டைகளைப் போட்டுக் கொண்டு புறணி பேசவும் இந்த சுதந்திரம் இப்போது உங்களுக்கும் எனக்கும் பயன் படுகிறது என்றால்....

அது எவ்வளவு வேதனையான விடயம்.

300 வருடங்களுக்கும் மேலாக அடிமைகளாய் திரிந்து அடிபட்டு, மிதிபட்டு, பின் சுதந்திரப்பட்டு இன்று தன்னை ஒரு ஜனநாயக நாடாய் வரிந்து கொண்டு மெல்லநடைபோட்டுக்கொண்டிருக்கும் இந்திய தேசம் நம்பிக் கொண்டு இருப்பது தன்னுள் மிகுதியாய் நிறைந்து கிடக்கும் இளையர்க ளைத்தான்....

சமகால சுயநல அரசியலை குற்றம் கூறிக் கொண்டு நமக்கும் இந்த தேசத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று ஒதுங்கிப் போய் விடாமல்.... பெற்ற சுதந்திரத்தின் பெருமைகளை பேணிக் காப்பதோடு...சுதந்திர தேசத்தின் பெருமைகளை இந்திய மக்களாகிய நாம், சக இந்தியரிடமும் எடுத்தியம்புவோம்...!

தேசத்தில் வாழும் அத்தனை பேரின் உரிமைகள், கடமைகளை என்னவென்று அறியச் செய்வோம்....! மக்கள் மத்தியில் விழிப்புணர்வுக் கருத்துக்களை நம்மால் இயன்ற அளவு பரப்பி...ஒரு மிகப் பெரிய தேசத்தின் தெளிவான, புரிதல்கள் கொண்ட ஒப்பற்ற குடிமகனாக வாழ்வோம்...! *நன்றி- இணையம்.*





# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



65




**அத்தியாயம் - V**

## வீடுகள் மாறும் படலம்

கல்வி என்று வரும்போதும், அறிவுத் தேடல் என்று வரும்போதும் அதன் மகிழ்ச்சியும் ஈடுபாடும் அலாதியானவை. மனித இனம் கல்வியை வேணவாவாகக் கொண்டிருக்க வேண்டும் என்று அந்தச் சமுதாயம் எதிர்பார்க்கிறது எனலாம். யாழ்ப்பாணத் தமிழ் மக்களைப் பொறுத்த வரையிலே கல்வி என்பது சமூக உயர்வுக்கும் திரவியம் திரட்டுவதற்கும் உயர் சமூக அந்தஸ்து பெறுவதற்கும் திறவுகோலாக அமைகிறது. ஒரு பண்பாட்டு வாழ்க்கைக்கும், மரியாதையான சமூக நடத்தைக்கும் சமூகப் பொறுப்புக்கும் அதுவே அவசியம் என்று மதிக்கப்படுகிறது. தற்பெருமை கொண்ட இந்த மூதாட்டி, இளம் பெண்ணாக இருந்தபோது தமிழ்ச் சமுதாயம் கனவு காணும் தொழிலான மருத்துவத் தொழிலை நோக்கி, தமது புதல்வனின் அக்கறையை திசை திருப்பியிருப்பார். நினைத்ததை சாதிக்கும் ஒரு தாயாக ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை தமது மகனுக்கு ஈட்டிக் கொடுக்கும் முனைப்போடு செயற்பட்டிருப்பார். அந்த மகன் தமது பிரத்தியேகக் கல்விக்காக பல மணிநேரம் செலவிடக்கூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து ஊக்கப்படுத்தியிருப்பார். அதிகாலையில் மைந்தனை எழுப்பி, அவருக்கு வேண்டிய தேநீரையோ கோப்பியையோ பாலையோ தயாரித்து பள்ளிக்குச் செல்வதற்கு முன் அந்தக் காலை வேளையில் கூடுதலாகப் படிப்பதற்கு வழி வகுத்திருப்பார். பள்ளி முடிந்த பின் மாலை வேளையில் ரியூசன் படிப்புக்கு ஏற்பாடு செய்து கல்வி மேம்பாட்டை அதிகரிக்க உதவியிருப்பார். இந்தக் கடமைகளை கிரமமாக தமது மற்றப் பிள்ளைகளுக்கும் ஏதோ ஓர் அளவில் அவர் செய்திருப்பார். தமது முயற்சியில் இந்தத் தாய் வெற்றியும் கண்டிருக்கிறார். அவருடைய மகன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிந்து மருந்துவராக தேறியிருக்கிறார். இலங்கைத் தமிழ்ச் சமுதாயம் கடைத்தேறக் கிடைத்த ஒரே வழி வெளிநாடு செல்வதேயாகும். அந்த மகனும் அதே வழியில் வெளிநாடு சென்றுவிட்டார். உண்மையில் அவருடைய எல்லாப் பிள்ளைகளும் வெளிநாடுகளுக்கே சென்று விட்டார்கள். இத்தனையும் சாதித்த அந்தத் தாய்க்கு இறுதியாகக் கிடைத்தது இப்போதைய தனிமையும் வெறுமையும்தான். இதே வழியைக் கடைப்பித்த எத்தனையோ பெற்றோருக்குக் கிடைத்ததும், இந்த மதிப்புக்குரிய மூதாட்டிக்குக் கிடைத்த அதே துயரக் கதிதான். இப்பொழுது அவருக்கு தள்ளாமை நிலை. உயிரின் தீபம் மெல்ல மெல்ல ஒடுங்கத் தொடங்கியிருக்கிறது. பிள்ளைகளால், பேரப்பிள்ளைகளால் பூட்டப் பிள்ளைகளால் கிடைக்கும் மகிழ்ச்சி, அரவணைப்பு, பாதுகாப்பு எவையுமே கிடைக்காத ஏக்கம். சுற்றி அடைக்கப்பட்ட பரம்பரைக் காணி பூமியிலும் வீட்டிலும் இன்று அடைபட்டு, தனிமையும் துயரமும் வாட்ட, இன்று ஒடுங்கும் நிலை அவருடையது. வெளிநாடுகளில் இருந்து வரும் கடிதங்கள் மிக அரிதாகவே இருக்கின்றன என அவர் வருந்திக் கூறும்போது அதில் ஒரு சோக இழையையும் கடுப்பையும் காணலாம். தனது உணர்வுகளைத் தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டு, யார் மீதும் தங்கியிராத இந்த மூதாட்டியும், இவரைப் போல பலரும் காலத்தின் விளைவுகளாக இங்கே இருக்கிறார்கள். தமிழ் இனம் மீதான அரசின் ஒடுக்கு முறையும் சித்திரவதைகளும் இவருடைய வேணவாவுக்குக் குறுக்கே நின்றன. படிப்படியாகத் தமது பிள்ளைகளின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற அவருடைய ஆசையில் மண் போட்டன. எனவே, தமது வயதான காலத்தில் கூட்டுக் குடும்ப இனி

> நாம் இருந்த சூழ்நிலையில் மனம் சோர்ந்து போகாமல் இருப்பதற்கு மக்கள் தந்த ஆதரவு எனது மனதை நிறைத்தது. ஆனால்,தலைமறைவு வாழ்க்கையின் முழுக் காத்திரத்தையும் நாம் உணர்ந்திருக்கவில்லை.

மையைச் சாதிக்க வேண்டும் என்ற தமது ஆசையை ஒதுக்கிக்கொண்டு வெளி நாடுகளில் தமது பிள்ளைகளுக்கு நல்ல எதிர்காலம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அவர்களை வழியனுப்பி வைத்தார். அதே சமயம், பரம்பரை பரம்பரையாக வந்த காணி பூமிகளுடனும் சொத்துடைமைகளுடனும் பண்பாட்டுப் பாதுகாப்புகளுடனும் வாழ்ந்து வந்த வாழ்க்கையை விட்டுச் செல்ல அவர் விரும்பவில்லை. எனவே, நாம் முதற்தடவையாக அந்த வீட்டுக்குச் சென்றபோது, ஒரு புறம் படுக்க ஒரு பாய், இரவு கூதலில் போர்க்க ஒரு போர்வையைக் கண்டோம். அடுக்களைக்குள் அவர் ஏதோ செய்து கொண்டிருந்தார். சமுதாயம் அவரிடம் எதிர்பார்ப்பது போல ஒரு பாட்டிக்குரிய இரக்கத்தோடு அவர் எம்மை நடத்தினார்.

பொட்டு அம்மான் வேறொரு பகுதிக்குச் சென்றார். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மூத்த போராளிகளில் ஒருவரான நடேசன் எம்முடனேயே இருந்தார். அவருடைய கிராமத்தில் இந்தியப் படையினரின் தேடுதல் நடவடிக்கை அதிகரித்ததும் அவர் தமது மனைவியையும் பிள்ளைகளையும் விட்டு விட்டு பாதுகாப்பான இடம் நாடவேண்டியதாயிற்று. இந்தியப் படைகள் அவருக்காக வீடு வீடாகத் தேடிக் கொண்டிருந்தபோது வீட்டுச் சுவர்களில் அமைக்கப்பட்ட இரகசியப் பலகை அறைகளில் அவர் பல மணி நேரம் பதுங்கியிருக்கிறார். தமிழேந்தியும் எம்முடன் சேர்ந்து கொண்டார். இவர் பிரபாகரனுக்கு மிகவும் நெருக்கமானவர். அவருடைய நம்பிக்கைக்கு உரியவர். புலிகளில் அவரும் ஒரு மூத்த போராளி. முழு இயக்கத்தின் நிதிக்கும் அவரே பொறுப்பாளர். அவரிடம் ஒரேயொரு பயணப் பை. அதில் பணமும் நகையும். இயக்கத்தின் நிதி அது. அந்தப் பை அவருடன் எப்போதும் ஒட்டியபடியே இருக்கும். தமிழேந்தி எமது குழுவுடன் போவதும் வருவதுமான தொடர்பை வைத்திருந்தார். வடமராட்சியில் இருப்பது ஆபத்து என உணர்ந்த ஒரு கட்டத்தில் வன்னி வனத்துக்குப் புறப்பட்டார். கெட்ட காலம் வழியில் ஒரு சுற்றிவளைப்பின்போது சிக்கிய அவர், இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்திருந்த காலத்தில் காங்கேசன்துறைச் சிறையில் அடைக்கப்பட்டார். இரும்பு மனவுறுதி கொண்ட இந்த மனிதரை இந்தியர் கடுஞ்சித்திரவதைக்கு உள்ளாக்கினார்கள். மன வைராக்கியத்தோடு அவர் அதைத் தாங்கிக் கொண்டார். அவரைப் பணிய வைக்க அவர்களால் முடியவில்லை. அவருடைய உதடுகளில் இருந்து தகவல் எதுவும் உதிரவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியர் பின்வாங்கியபோது விடுதலையான அவர், விரைந்து சென்று புதைத்த இடத்திலிருந்து நிதியை மீட்டுப் பிரபாகரனிடம் கையளித்தார். இன்றும் விடுதலைப் புலிகளின் தளம் பாத் தலைவர்களில் ஒருவராகத் திகழும் தமிழேந்தி, இயக்கத்தின் நிதியை தொடர்ந்தும் நிர்வகித்து வருகிறார். தமிழேந்தியேதான் நாம் ஆபத்தான சூழ்நிலையில் இருப்பதை இனம் கண்டு அந்தப் பகுதியில் இருந்து எம்மை வெளியேற்ற உடனடியாக ஆயத்தம் செய்ய வேண்டும் என்று வன்னி வனத்தில் உள்ள பிரபாகரனுக்கு அவசரச் செய்தி அனுப்பியவராவார். அன்று எம்மிடையே நிலவிய செய்தித் தொடர்புகள் கடினமான நிலையிலேயே இயங்கிக் கொண்டிருந்ததால் பதில் வர நாள் பிடித்தது. இறுதியாக பதில் எம்மை வந்தடைவதற்கு முன்பாக மிகப் பெரும் ஆபத்துக்களுக்கு முகம் கொடுக்கும் நிலைக்கு நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

நாம் இருந்த சூழ்நிலையில் மனம் சோர்ந்து போகாமல் இருப்பதற்கு மக்கள் தந்த ஆதரவு எனது மனதை நிறைத்தது. ஆனால், தலைமறைவு வாழ்க்கையின் முழுக்காத்திரத்தையும் நாம் உணர்ந்திருக்கவில்லை. நாம் திரும்பவும் இடம்பெயரவேண்டும் என்றும், அதுவும் சில நாள்களிலேயே புறப்பட வேண்டும் என்றும் சுக்ளா கூறியபோது, ஓர் இடத்தில் தரிப்பதற்கும் அங்கிருந்து நகர்வதற்கும் எந்த நேரமும் தயாராக இருப்பது தலைமறைவு வாழ்க்கையில் ஓர் அம்சம் என்பதைப் புரிந்து கொண்டோம். ஒரே இடத்தில் தொடர்ந்து இருப்பது ஆபத்து என்பது தெளிவாகப் புரிந்தது. ஆனால் இடையறாது இடம் மாறுவது கூட ஆபத்தைத் தரலாம். நாம் தவிர்க்க விரும்புவர்களின் கரங்களிலேயே சிக்கலாம். நாம் ஓர் இடத்தில் தரிக்கும்போது அங்கே இருப்பது வெளியே தெரிய வர இரண்டு மூன்று நாள்கள் போதும். காரணம் எனது நிறம். போராளிகளில் பெரும்பாலானவர்கள் பகல் வேளையில் சாதாரண உடையில் வடமராட்சியில் நடமாடினார்கள். பாலா கூட. ஒரு விவசாயியின் தலைப்பாகையும், மழித்த முகமும் பாமரத் தோற்றமுமாக தம்மை மறைக்க முடிந்தது. ஆனால் என்னால் முடியவில்லை. கோடியில் உள்ள கழிப்பகத்துக்கு நான் நடந்து செல்வதை யாராவது பார்த்தலே போதும். நாம் இருக்கும் இடம் வெளியாகிவிடும். அதன் பின் இடம்பெயர்வது பற்றி நாம் உடனே யோசிக்க வேண்டும். மக்களுக்கு தெரிந்து விட்டால் தகவல் உடனே பரவிவிடும். நாம் சுற்றி வளைப்புக்கு உள்ளாகும் நிலையும் ஏற்பட்டு விடும். ஆனால், அதுவரை இந்தியரை ஓர் அடி முந்திக் கொண்டு தப்பியபடி இருந்தோம். இப்படி எமது அடுத்த நகர்வு கரவெட்டியில் இருந்து சில மைல் தூரத்தில் உள்ள நவிண்டில் என குறிக்கப்பட்டது. அதுவரை இந்தியர் ஊடுருவாத இடமாக அது இருந்தது.

(தொடரும்...)

# நற்தொண்டுகள் பல செய்யும் நல்லை ஆதீனம்




**இன்று 51 ஆவது பீடாரோஹண விழா**

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான முருகப் பெருமான் வீற்றிருக்கும் யாழ்ப்பாண நல்லையம்பதியிலே ஆலயத்தின் மேற்கு வீதியிலே அழகுற அமைந்திருக்கும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இன்று 51 ஆவது பீடாரோஹண விழா. ஈழம் வாழ் மக்களுக்கு நற்தொண்டுகள் பல செய்கின்ற நல்லை ஆதீனத்தை ஸ்தாபித்தவர் முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பராமாசார்ய சுவாமிகள் ஆவார்.

1966 ஆம் ஆண்டு ஆடிக் கிருத்திகை நன்னாளிலே ஆரம்பிக்கப் பெற்ற நல்லை ஆதீனம் இன்று நன்கு வளர்ச்சியடைந்து சீரோடுஞ் சிறப்போடும் திகழ்கின்றது. 'மணி ஐயர்' என்று பலராலும் அன்போடு அழைக்கப்படுகின்ற இவர், சுவாமிநாத தம்பிரானாக இந்தியாவிலே காஷாயம் பெற்றுத் துறவுபூண்டு இலங்கைக்கு வந்து சேர்ந்தார். அதைத் தொடர்ந்து ஆரம்பிக்கப் பெற்ற ஒரே ஆதீனம் இதுவேயாகும்.

நல்லூர் மஹோற்சவ காலத்திலே இருபத்தைந்து நாளும் தொடர் பிரசங்கம் செய்து தமிழும் சைவமும் வளர தமது தொண்டையினாலேயே தொண்டு செய்து அரும்பாடுபட்டவர் நல்லை ஆதீன ஸ்தாபகர். ஒவ்வொரு நாளும் நடக்கின்ற இந்தக் கதாப் பிரசங்கத்தைக் கேட்பதற்கு இரவு 10.30 மணி வரையுமே அமர்ந்திருக்கும் அடியார்கள் அனைவரையும் தம் வசம் ஈர்த்திழுத்து வைத்திருக்கும் இவரது திறமையைப் பற்றிச் சொல்லிக் கொண்டே இருக்கலாம்.

கந்தபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம் போன்றவற்றை விளக்கமாகச் சொல்லும் பேராற்றல் படைத்த இவர் இலங்கையில் மட்டுமல்லர் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் முதலாய பல்வேறு நாடுகளுக்குச் சென்று பிரசங்கம் செய்த பெருமையையுடையவர்.

முன்பு ஈழநாட்டிலே சைவத்தையும் தமிழையும் நன்கு வேரூன்றச் செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் போன்ற தோற்றத்தையுடைய இவர், இந்த நல்லை ஆதீனத்திலே சமய பாட வகுப்புகள், சங்கீத வகுப்புகள், பாலர் பாடசாலை முதலானவற்றையும் நடத்தி அரிய சேவை செய்துள்ளார் என்று கூறினால் மிகையாகாது.

இவர் சமாதியடைந்த பின்னர் ஆதீன முதல்வராக வந்த இரண்டாவது குரு மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும் அவர் விட்டுச் சென்ற பணியைச் செவ்வனே தொடர்ந்து செய்து வருகின்றார்.

இன்று நடைபெறுகின்ற பீடாரோஹண விழாவிலே குருமூர்த்த ஆலயத்திலே விசேட அபிஷேக ஆராதனைகளுடன் கொலுபூசை, பட்டணப் பிரவேசம், அன்னதானம் என்பனவும் சிறப்புற இடம்பெறுகின்றன. ஆகவே, அடியார்கள் பலரும் இன்று நடைபெறும் விழாவிலே பங்குகொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். ★

'கலாபூஷணம்' இராசையா ஸ்ரீதரன்

# வல்லரசு நாடுகளின்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பாகிஸ்தானின் ஒரேயொரு கரையோரப் பாதை இந்திய மாக்கடலில் அமைந்துள்ளது. இந்தப் பாதை வர்த்தக மற்றும் சக்தி வழங்கல்களுக்கு முக்கியமாக உள்ளது. பாகிஸ்தானிற்கு அருகிலுள்ள பிரதேசங்களில் இந்தியாவின் ஆதிக்கத்தைத் தடுக்க வேண்டிய தேவையும் பாகிஸ்தானுக்கு உள்ளது. ஈரான் தொடக்கம் தாய்லாந்து வரை கடல் மற்றும் தரை வழிகளின் ஊடாகாத் தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதே இந்தியாவின் நோக்கமாகும்.

இந்நிலையில் சீன-பாகிஸ்தானிய பொருளாதாரத் திட்டத்தை இந்தியாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆப்கானிஸ்தான் தொடக்கம் தாய்லாந்து வரையான கரையோரத்தில் இந்தியா தனக்கென சொந்தமான இலக்கைக் கொண்டுள்ளதாக பா.ஜ.க தலைவர்கள் வெளிப்படையாக அறிவித்திருந்தனர்.

இந்தியா மற்றும் சீனா ஆகியன பெரிய கடல் சார் மற்றும் பொருளாதார சக்திகளாகவளர்ந்துவருகின்றமையால் இவ்விரு நாடுகளையும் இந்திய மாக்கடலில் எதிர்கொள்வதென்பது அமெரிக்காவிற்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது. தென்சீனக் கடல் மற்றும் கிழக்குச் சீனக் கடலில் சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதைத் தடுப்பதற்காக சீனாவிடமிருந்து அதன் நட்புநாடுகளை விலகச் செய்ய வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு உண்டு.

### அமெரிக்காவும் தலையீடு

இந்திய மாக்கடல் பிராந்தியத்தை தனியொரு நாடு அதிகாரம் செய்வதை அமெரிக்கா விரும்பவில்லை. ஏனெனில் இது தனது நீண்ட கால பொருளாதார நலன்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் எனவும் அதிகாரச் சம நிலையைப் பேணுவதிலும் குழப்பத்தை விளைவிக்கும் எனவும் அமெரிக்கா கருதுகிறது. இதனால் அமெரிக்கா தனது பொருளாதார மையத்தை மேற்கிலிருந்து கிழக்கிற்கு மாற்றி வருகிறது.

இந்திய மாக்கடலை எந்தவோர் ஆசிய நாடும் தனது தனித்துவமான அதிகாரத்திற்குள் வைத்திருந்தால் ஆசியாவுடனான வர்த்தகச் சமநிலையைப் பேணுவதில் குழப்பத்தை விளைவிக்கும் என்பது அமெரிக்காவின் எண்ணமாகும். குறிப்பாக மலாக்கா நீரிணை, ஹோர்மஸ் நீரிணை மற்றும் மண்டேப் நீரிணை ஆகியன உட்பட இந்திய மாக்கடலின் மீதான செல்வாக்கு தனியொரு நாட்டுக்குச் சொந்தமானதாக இருக்கக்கூடாது என அமெரிக்கா கருதுகிறது.

இந்திய மாக்கடல் பிராந்தியத்திலும் பஹ்ரெய்ன், டிஜிபோட்டி, டியாகோ கார்சியா போன்றவற்றிலும் அமெரிக்கக் கடற்படையின் பிரசன்னம் காணப்படுகிறது. அமெரிக்கா இந்திய மாக்கடல் கரையோ ரத்தின் வழியாக ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளுடன் கடல்சார் கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுகிறது.

டெல்அவிவ், புதுடில்லி அரசாங்கங்களுடன் அமெரிக்காவின் உறவு நிலை தற்போது வளர்ச்சியடைந்து வரும்நிலையில், இந்திய மாக்கடலில் இந்தியா தலைமைத்துவம் வகிக்க வேண்டும் என உந்துசக்தி வழங்குகிறது. இதை சீனா மற்றும் பாகிஸ்தானால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் சீனா மற்றும் பாகிஸ்தான் தமக்கிடையிலான உறவை மேலும் பலப்படுத்தி வருகின்றன.

குவடாரில் மையப்படுத்தப்பட்டுள்ள சீன-பாகிஸ்தானிய மூலோபாய கடல்சார் கூட்டு நடவடிக்கை இந்திய மாக்கடலில் செல்வாக்குச் செலுத்த வேண்டும் என்கின்ற இந்திய-அமெரிக்காவின் குறிக்கோளுக்கு ஊறுவிளைவிக்கும்.

### இந்திய மாக்கடல் மீது ஐரோப்பிய நாடுகளும் மிக ஆர்வம்

இந்திய மாக்கடல் மீது ஐரோப்பாவும் மிகப் பலமான பொருளாதார மற்றும் பாதுகாப்பு நலன்களைக் கொண்டுள்ளது. இந்திய மாக்கடலில் காணப்படும் பெறுமதி மிக்க கடல் படுக்கைகளை அகழ்வதற்கான உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான பணிகளில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபடுகின்றன. மேலும் இந்திய மாக்கடலில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான ஆர்வத்தையும் சில ஐரோப்பிய நாடுகள் கொண்டுள்ளன.

மத்திய கிழக்கு நாடுகளுக்கும் இந்திய மாக்கடல் முக்கியத்துவம் மிக்கதாக அமைகின்றது. குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகள் தமது பொருளாதார மற்றும் இராணுவ வளங்கள், அமெரிக்கா தலைமையிலான ஐரோப்பிய-இஸ்ரேலிய யுத்தங்களால் சிதைவுறலாம் என அச்சமுறுகின்றன. இவ்வாறான காரணங்களால் இந்திய மாக்கடல் அரசியல், மூலோபாய மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கான மையமாக மாறியுள்ளதாக ஆய்வாளர் சல்மான் றபி செய்க் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய மாக்கடல் மீதான அதிகாரத்துவ நாடுகளின் மரபுசார் மற்றும் அணுவாயுதக் கப்பல்களின் பிரசன்னம் அதிகரித்து வருவதே இதற்கான காரணமாகும். இந்திய மாக்கடலில் தமது பொருளாதார நலன்களை நிலைப்படுத்துவதற்கும் பெரிய வர்த்தகப் பங்காளிகளைத் தக்க வைத்திருப்பதற்கும் சீனா மற்றும் இந்தியா ஆகியன பெரும் அதிகாரத்துவப் போட்டிக்குள் நுழைவதற்கான நகர் வுகள் இடம்பெறுகின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




இந்திய மாக்கடல் பிராந்தியத்தை தனியொரு நாடு அதிகாரம் செய்வதற்கு முடியாது எனவும் இதனால் இவ்விரு நாடுகளும் தமது இலக்குகளை அடைவதற்கு பல்வேறு நகர்வுகளை முன்னெடுக்க வேண்டியிருக்கும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இதனால் இந்திய மாக்கடல் மீது செல்வாக்குச் செலுத்த விரும்பும் அதிகாரத்துவ நாடுகள் சிறிலங்காவின் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் விமானநிலையத்தை சீனா தனது சொந்தச் சொத்தாகப் பயன்படுத்துவதுடன், அங்கு தனது பிரசன்னத்தை நிலைப்படுத்தியுள்ளதை ஆராய வேண்டிய தேவையுள்ளது.





# எங்கள் நிலத்தை நல்லாட்சி அரசு விடுவிக்கும் என காத்திருக்கிறோம்

## இரணைதீவு மக்கள் கோரிக்கை



கிளிநொச்சி, ஓக. 15

எங்கள் ஊரில் சென்று வாழ்வதற்கான உரிமையை நல்லாட்சி அரசு ஏற்படுத்தித்தர வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கை என தொடர் கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடு பட்டு வரும் இரணைதீவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

தமது சொந்த பகுதியை விடுவிக்குமாறு கோரி 106 ஆவது நாளாக இரணைதீவு மக்கள் தொடர் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத் துள்ளனர்.

கடந்த மே மாதம் ஆரம்பிக் கப்பட்ட போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவ துடன், அரசினது கவனத்தை யும் ஈர்க்கும் வகையில் கிளி நொச்சியில் பேரணி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

50 ஆவது நாளில் ஏ-32 வீதி பூநகரி மன்னார் வீதியை வழிமறித்து வீதிமறியல் போராட்டத்திலும், நூறாவது நாளில் கடந்த வாரம் கொழும் பில் ஒரு போராட்டத்திலும் இரணைதீவு மக்கள் ஈடுபட் டிருந்தனர்.

இவ்வாறு பல்வேறு கவன வீர்ப்புப் போராட்டங்கள் முன் நெடுக்கப்பட்ட போதும், தங்களுடைய நிலங்கள் இது வரை விடுவிக்கப்படவில்லை எனத் தெரிவித்து போராட் டத்தை முன்னெடுத்து வரு கின்றனர்.

இதுதொடர்பில் இந்த மக் கள் தெரிவித்தவை வருமாறு:-

நல்லாட்சி அரசு 20, 25 வருடங்களுக்கு மேலாக விடுவிக்கப்படாதநிலங்களைக் கூட விடுவித்து அங்கு மக் களை மீள்குடியேற்றி வருகின் றது. இந்த நல்லாட்சி மீது நல்ல நம்பிக்கையிருக்கின்றது. எங்களின் நிலங்களை எங் களின் நம்பிக்கைகள் ஆசை கள் வீண் போகாது. எங்களது நிலத்தை நல்லாட்சி அரசு விடுவிக்குமென்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

கடந்த ஆட்சியின்போது, பல அரசியல்வாதிகள் எங்கள் நிலத்தைக் கேட்க வேண்டாம் எனக் கூறினார்கள். நாங்கள் எங்கள்நிலத்தில்தான்தொழில் செய்து நிம்மதியாக வாழ்ந் தோம், எவரிடமும் கையேந்த வில்லை.

இன்று இந்த இடத்திலே எவர் வருவார், எதைத் தருவார் கள் எனவும் பார்த்திருக்கின் றோம். எனவே, எங்கள்நிலத்தை விடுவித்து அங்கே குடியேறி நிம்மதியாக வாழ்வதற்கும் தொழில் செய்வதற்கும் இந்த நல்லாட்சி அரசு வழிவகை செய்ய வேண்டுமெனபோராட் டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

---

## யாழ். நீதிபதி இளஞ்செழியனை அமெ.தூதுவர் சந்தித்தார்!



கொழும்பு, ஓக. 15

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மற்றும் இலங் கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற இந் தச் சந்திப்பின் போது நீதிபதியை கண்ட அமெரிக்க தூதுவர், அவ ரைக் கட்டியணைத்து கைலாகு கொடுத்திருந்தார்.

சுமார் ஒரு மணிநேரம் வரையில் நீடித்த இந்தச் சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் குறித்து பேசப்பட்டுள்ளன எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அந்த வகையில், துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தின் போது நீதி பதி என்ற நிலையில் இருந்த மா.இளஞ்செழியன்நடந்துகொண்ட விதம் அனைத்தையும் பார்த்தேன் எனஅமெரிக்கதூதுவர்கூறியுள்ளார்.

நீதிபதியின் செயலைக் கண்டு மிகுந்த மன நெகிழ்ச்சி அடைந் தேன் என்றும் அமெரிக்க தூதுவர் என்ற ரீதியில் என்ன உதவி வேண்டு மானாலும் தன்னைத் தொடர்பு கொள்ளுங்கள்என்றும்நீதிபதியிடம் அமெரிக்க தூதுவர் உறுதியளித் துள்ளார்.

இதேவேளை, கடந்த மாதம் யாழ்.நல்லூர்பகுதியில்இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின் போது உயிரிழந்த தனது மெய்ப்பாது காவலரின் மனைவியின் காலில் நீதிபதி மா.இளஞ்செழியன் வீழ்ந்து அழுதிருந்தார்.

இந்தச் சம்பவத்தை கண்டு ''ஆழமாக நெகிழ்ந்தேன்'' என இலங்கைக்கான அமெரிக்கத் தூது வர்அடுல்கெசாப்தனது உத்தியோக பூர்வ டுவிட்டர் பக்கத்தில் விடுத் திருந்த பதிவில் தெரிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது.

---

## வெடிபொருள்களை அகற்றுவதில் சவால் நிறைந்துள்ள முகமாலை!



கொழும்பு, ஓக. 15

கிளிநொச்சி - முகமா லைப் பகுதியில் தற்போது வெடி பொருள்கள் அகற்றப் பட்டு வரும் பிரதேசம் மிக வும் சவால் நிறைந்து காணப் படுகிறது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி - முகமா லைப் பகுதியில் யுத்தகாலத் தில் புதைக்கப்பட்ட வெடி பொருள்களை அகற்றும் பணிகள் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு, வெடிபொருள் களை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் பகுதி ஆபத்து, சவால் நிறைந்து காணப்படுகின்றது என கண்ணிவெடிகளை அகற்றும் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி - பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள இத்தா வில், முகமாலை, வேம் பொடுகேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வெடி பொருள்களை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

இவ்வாறு முகமாலைப் பகுதியில் மிகவும் ஆபத்தான முறையில் வகைதொகை யின்றி வெடிபொருள்கள் புதைக்கப்பட்டுள்ளதுடன், நீண்டகாலம் காத்திருந்து உயிர் பறிக்கக்கூடிய நிலை காணப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், ஏற்கனவே பல உயிரிழப்புக்கள் இடம்பெற் றுள்ளன், பலர் காயங்களுக் கும் உள்ளாகியுள்ளனர். இந் தப் பகுதிகளில் உள்ள மண் அணைகள், கைவிடப் பட்ட காவலரண்கள் என்ப வற்றில் அதிகளவான வெடி பொருள் கள் காணப்படுகின்றன.

எனவே, இவ்வாறான பகுதிகளுக்குள் பொதுமக்கள் செல்வதை முழுமையாக தவிர்த்துக் கொள்ள வேண்டு மென பச்சிலைப்பள்ளி பிர தேச செயலாளரும், கண்ணி வெடி விழிப்புணர்வு செயற் பாடு செயலகத்தினரும் தொடர் கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர்.

நன்கு பயிற்சி பெற்று நீண்ட காலம் பணிகளில் ஈடுபட்டு வரும் கண்ணி வெடி அகற்றும் அணியின ருக்கே இந்தப் பகுதி மிகவும் சவால் நிறைந்த பகுதியாக காணப்படுகிறது என இப் பகுதிகளில் கண்ணிவெடி களை அகற்றும் நிறுவனத் தினர் தெரிவித்துள்ளனர்.

---

## பிரித்தானிய படையினருக்கு எதிராக இலங்கைத் தமிழ் பெண் முறைப்பாடு!

இலங்கை விசேட அதிரடிப் படையினருக்கு பயிற்சி வழங் கியமை தொடர்பில், பிரித்தா னிய படையினருக்கு எதிராக தமிழ் பெண்ணொருவரால் அயர்லாந்தில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளி யிட்டுள்ளது.

பிரித்தானியாவின் RUC படைக்கு எதிராகவே அயர் லாந்து பொலிஸாரிடம் இந்த முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் விதவைப் பெண் ஒரு வரால் இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும், அந்தப் பெண் தொடர்பான விவரங்கள் வெளியிடப்பட வில்லை. 1986 ஆம் ஆண்டு தனது உறவினர்கள் 10 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும், அதற்கு விசேட அதிரடிப் படையினர் பொறுப் புக் கூற வேண்டும் எனவும் அந்த முறைப்பாட்டில் குறிப் பிடப்பட்டுள்ளது.

பிரித்தானிய RUC படையி னரால் இலங்கை விசேட அதிர டிப் படையினருக்கு பயிற்சி வழங்கியமையினால் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட் டனர்என அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அந்த ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது.

---

## மொனராகலைக்கு அநீதி இழைத்துவிட்டது என சுதந்திரக் கட்சித் தலைமை மீது குற்றச்சாட்டு!

சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் கட்சி தலைமையினால் மொன ராகலை மாவட்டத்திற்கு அநீதி இழைக் கப்படுகிறது என முன்னாள் மாகாண அமைச்சர் குமாரசிறி ரத்நாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

ஊவா மாகாண சபையின் சுகாதார மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச் சராக இருந்த குமாரசிறி ரத்நாயக்க அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமைய சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் துமிந்த திசாநாயக்கவினால் பதவி விலக்கப்பட்டிருந்தார்.

அவருக்குப் பதிலாக மஹிந்த தரப்பி லிருந்து மைத்திரி தரப்புக்கு சென்ற அனுர விதானகமகே மாகாண அமைச் சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊவா மாகாண சபையின் முதலமைச் சர்பதவி மற்றும் இரண்டு மாகாண அமைச் சுப் பதவிகள் பதுளை மாவட்டத்துக்கு வழங்கப்பட்டிருந்த நிலையில் மொனரா கலை மாவட்டத்தைச் சேர்ந்த தன்னை பதவி விலகச் செய்து அதனையும் பதுளை மாவட்டத்துக்கு வழங்கப்பட் டுள்ளது என முன்னாள் அமைச்சர் குமார சிறி ரத்நாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

இதன்மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மொனராகலை மாவட்டத்திற்கு அநீதி இழைத்திருக்கின்றார் என அவர் குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்துள் ளார். இந்நிலை தொடருமாயின் சுதந் திரக் கட்சிக்கும் தலைமைத்துவத்திற் கும் எதிரான நிலைப்பாடு ஒன்றை எடுக்க நேரிடும் என்றும் குமாரசிறி ரத்நாயக்க தொடர்ந்தும் எச்சரித்துள்ளார்.

# மண்சரிவில் 2 பஸ்கள் சிக்கி 34 பேர் பரிதாப உயிரிழப்பு





**இமாச்சலப் பிரதேசத்தில் துயரம்**

இமாச்சலப் பிரதேசத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இருபஸ் உருண்டுவிழுந்ததில் 34 பேர் உயிரிழந்துள்ளனர். மீட்புப் பணியில் இராணுவத் தினரும் மீட்புக் குழுவினரும் ஈடுபட்டுள்ளனர்.

இமாச்சலப் பிரதேச மணாலியில் இருந்து கட்ரா என்ற இடத்துக்கும் மணாலியில் இருந்து சம்பா என்ற இடத்துக்கும் 2 பஸ்கள் நேற்று முன்தினம் இரவு சென்று கொண்டிருந்தன.

திடீரென மேகவெடிப்பு ஏற்பட்டு பலத்த மழை கொட்டியதால், மாண்டி மாவட்டம் கொட்ரூபி என்ற இடத்தில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 2 பஸ்களும் 800 மீற்றர் ஆழமுள்ள பள்ளத்தில் உருண்டு விழுந்தன.

இந்த விபத்தில் 34 பேர் இறந்தனர். ஒரு பஸ் முழுமையாகவே மண்ணுக்குள் புதைந்துவிட்டது. இறந்தவர்கள் எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று அஞ்சப்படுகின்றது.

உயிரிழப்பு 50 ஆக உயரக் கூடும் என்று மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜி.எஸ். பாலி தெரிவித்துள்ளார்.

சம்பவம் நடந்த இடத்தை முதல்வர் வீரபத்திர சிங் நேற்று காலை பார்வையிட்டார். இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 5 லட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும் என்று அவர் அறிவித்தார்.

காயமடைந்தவர்களின் குடும்பத்தினரையும் முதல்வர் வீரபத்திர சிங் சந்தித்து ஆறுதல் கூறினார்.

காயமடைந்தவர்களின் சிகிச்சைக்கு ஆகும் செலவை அரசு ஏற்கும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து பிரதமர் நரேந்திர மோடி டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

மாண்டி மாவட்டத்தில் விபத்து நடந்த பகுதியில் சாலைகள் மூடப்பட்டு மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ப)



## வாயில் 'பிளாஸ்ரர்' ஒட்டி விவசாயிகள் போராட்டம்

டில்லியில்தமிழகவிவசாயிகள் வாயில் 'பிளாஸ்ரர்' ஒட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும், நதிகளை இணைக்க வேண்டும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகளின்கடன்களைத்தள்ளுபடி செய்ய வேண்டும். போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்று வரும் இந்த போராட்டம் நேற்றுடன் 29 ஆவது நாளாக நீடிக்கின்றது. ஒவ்வொரு நாளும் நூதன முறையில் போராட்டத்தை இவர்கள் நடத்தி வருகிறார்கள்.

நேற்று முன்தினம் அமெரிக்கத் தூதரக அலுவலகத்துக்குச் சென்ற அவர்கள் அங்கு கையில் தட்டு ஏந்தி பிச்சை எடுக்கும் போராட்டம் நடத்தினர். அமெரிக்க அரசு தங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று அந்த தூதரகத்தில் இருந்தவர்களிடம் முறையிட்டனர்.

(ப)

## மோடியைச் சந்தித்தார் ஓ.பி.எஸ்.! இணையுமா அ.தி.மு.க. அணிகள்?



பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சந்தித்துப் பேசியுள்ளார். இச் சந்திப்பில்அ.தி.மு.க. அணிகள்இணைப்பு குறித்தும் அவர் பேசினார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது அ.தி.மு.க. எடப்பாடி அணி, ஓ.பி.எஸ். அணி, டி.டி.வி. தினகரன் அணி என 3 அணிகளாக அ.தி.மு.க. பிரிந்து உள்ளது.

இந்த நிலையில், டி.டி.வி. தினகரன் அணிக்குத் தக்க பாடம் புகட்டும் வகையில் பிரிந்து சென்ற ஓ.பி.எஸ். அணியை இணைக்கும் முயற்சியில் எடப்பாடி அணி தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக சசிகலா, டி.டி.வி. தினகரன் நியமனம் செல்லாது என்று எடப்பாடி பழனிச்சாமி சில நாள்களுக்கு முன்பு அதிரடி அறிவிப்பை வெளியிட்டார். இது எடப்பாடி அணியுடன் சேர ஓ.பி.எஸ். அணி விதித்திருந்த நிபந்தனைகளில் ஒன்று.

இதனால் ஓ.பி.எஸ். அணி-எடப்பாடி அணியுடன் இணைந்து விடும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் இதுபற்றி ஓ.பி.எஸ். கருத்து தெரிவிக்கையில் எங்கள் நிபந்தனைகளில் பாதி கிணற்றைத்தான் தாண்டி உள்ளனர் என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் துணை ஜனாதிபதி பதவியேற்பு விழாவுக்காக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி மற்றும் ஓ.பன்னீர்செல்வம் ஆகிய இருவரும் டில்லி சென்றிருந்தனர். இருவரும் பிரதமரைச் சந்திக்க முயற்சி எடுத்தனர்.

இரு அணியினரும் சண்டை போடுவதை நிறுத்தி விட்டு இணைந்து வந்து என்னை சந்தியுங்கள் என்று பிரதமர் கூறினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று காலை 11 மணியளவில் பிரதமர் மோடியை அவரது வீட்டுக்கு சென்று சந்தித்துப் பேசினார் ஓ.பி.எஸ்.

அப்போது அ.தி.மு.க. இரு அணிகள் இணைப்பு குறித்து விவாதித்தனர். பதவியை எதிர்பார்க்காமல் அனுசரித்து முதலில் இணையுங்கள். மற்றையதை பிறகு பார்த்து கொள்ளலாம் என்று பிரதமர் யோசனை தெரிவித்ததார் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே பிரதமருடனான ஓ.பி.எஸ். சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. எடப்பாடி அணி ஓ.பி.எஸ். அணி ஓரிரு நாளில் இணைவது அதிகவாய்ப்புகள் உள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மழை, வெள்ளத்தில் மிதக்கும் வடகிழக்கு மாநிலங்கள்

வடகிழக்கு மாநிலங்களில் ஏற்பட்ட மழை,வெள்ளத்தால் பல லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் அசாமில் வெள்ளப் பாதிப்பில் 15 பேர் பரிதாபமாக பலியாகினர்.

வடகிழக்கு மாநிலங்களான அசாம், உத்தரகாண்ட், மேற்கு வங்காளம், பீகார், மணிப்பூர் மற்றும் திரிபுரா ஆகிய வற்றில் பலத்த மழை பெய்து வருகின்றது. இதனால் அந்த மாநிலங்களில் ஓடும் ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பல லட்சம் மக்கள் பாதிப்பு அடைந் துள்ளனர். மேலும், பல லட்சம் ஏக்கர் மதிப்பிலான விளை நிலங்கள் தண்ணீ ரில் மூழ்கிச் சேதமடைந்துள்ளன.

### அசாமில் 15 பேர் சாவு

இந்நிலையில், அசாமில் கடந்த வியாழக்கிழமை முதல் பெய்து வரும் கனமழையால் 21 மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. பிரம்மபுத்திரா மற்றும் பத்திற்கும் மேற்பட்ட ஆற்றில் நீர் அபாயக் கட்டத்தை தாண்டி ஓடுகின்றது. வெள்ளத்தில் சிக்கி 15 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 22 லட்சத்திற்கு மேலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து நேற்று நடைபெற்ற அவசர கூட்டத்தில் மீட்பு மற்றும் நிவாரண பணிகளுக்கு இந்திய விமானப்படையை ஈடுபடுத்த வேண்டும் எனப் ராணுவத்திற்கு அசாம் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

அசாம் மாநில பேரிடர் மேலாண்மை அதிகாரிகள் கூறுகையில், 1.83 லட்சத்திற்கு மேலான மக்கள் தாழ்வான பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டு 678 நிவாரணமுகாம்களில்தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

# உணவகத்தில் துப்பாக்கி வேட்டு: வெளிநாட்டவர் உட்பட 17 பேர் சாவு!

மேற்கு ஆப்பிரிக்க நாடான புர்க்கினா பாசோவில் உள்ள உணவகம் ஒன்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தீவிரவாதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் சிக்கி, வெளி நாட்டவர் உட்பட 17 பேர் கொல்லப்பட்டனர். 8 பேர் படுகாயம் அடைந்தனர்.

உணவகத்துக்கு வெளியே அமர்ந்திருந்த வாடிக்கையாளர்களை நோக்கி மூன்று துப்பாக்கிதாரிகள் நடத்திய தாக்குதலிலேயே இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.




இதன்போது, தீவிரவாதிகளுக்கு எதிராக பொலிஸாரும் பதில் தாக்குதல் நடத்தினர். இந்தச் இந்தச் சண்டை சுமார் ஏழு மணித்தியாலம் வரை நடைபெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டவர் அதிகம் வந்து செல்லும் இங்குள்ள உணவு விடுதிகளில், கடந்த இரண்டு ஆண்டுகளில் நடத்தப்படும் இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

இந்தத் தாக்குதலுக்கு உடனடியாக எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும், ஐ.எஸ். தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலை நடத்தி இருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.



இந்தத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து, மேற்பகுதி இராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

அத்துடன், அமெரிக்கப் பிரஜைகளை புர்க்கினா பாசோவிலிருந்து வெளியேறுமாறு அமெரிக்கத் தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இதேபோன்று உணவகம் ஒன்றில் நடத்தப்பட்ட தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)





பாகிஸ்தானின் 70 ஆவது சுதந்திர தினம்:

## 400 அடி உயரக் கொடி ஏற்றி கோலாகலக் கொண்டாட்டம்!

பாகிஸ்தானின் சுதந்திர தினம் ஆண்டு தோறும் ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு இந்தியா-பாகிஸ்தான் எல்லைப்பகுதியான அட்டாரி-வாகாவில் நேற்று திங்கட்கிழமை 400 அடி உயரக் கொடிக் கம்பத்தில் அந்த நாட்டு தேசியக் கொடியை பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் பாஜ்வா ஏற்றிவைத்தார்.

பாகிஸ்தான் மக்களுடைய 70 ஆவது சுதந்திர தின விழாக் கொண்டாட்டம் நள்ளிரவு 12 மணியில் இருந்தே வாண வேடிக்கை, ஆட்டம், பாட்டம் எனக் களைகட்டியது.

இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சீனாவின் துணை பிரதமர் வாங் யாங் கலந்து கொண்டார். அங்குள்ள பாத்திமா ஜின்னா பூங்கா மற்றும் கராச்சி கடற்கரை ஆகிய பகுதி களில் பாகிஸ்தான் விமானப் படையின் கண்கவர் சாகச நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

120 அடி நீளமும், 80 அடி அகலமும் கொண்ட பாகிஸ்தான் நாட்டு தேசியக் கொடி சுமார் 400 அடி உயரமுள்ள கம்பத்தில் ஏற்றப்பட்டது. இந்தக் கொடிக்கு ''உலகிலேயே அளவில் எட்டாவது பெரிய கொடி'' மற்றும் 'தெற்காசியாவில் மிகப் பெரிய தேசியக் கொடி' என்ற சிறப்புகள் கிடைத்துள்ளன. (ச)

## வடகொரியாவுடன் போர் புரிவதற்கு உடனடிக் காரணம் எதுவும் இல்லை!

### இப்படிக் கூறுகிறார் அமெ. சி.ஐ.ஏ. இயக்குநர்

வொஷிங்டன், ஓக. 15

வடகொரியாவுடன் அணு ஆயுதப்போரை மேற்கொள்வதற்கு உடனடிக் காரணங்கள் எதுவும் கிடையா.

-இவ்வாறு அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏயின் இயக்குநர் மைக் போம்பியோ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பில் அமெரிக்கா தொடர்ந்தும் பொறுமையான தந்திரங்களைக் கையாளக் கூடாது. ஏனெனில், அமெரிக்காவின் பொறுமையைப் பயன்படுத்தி வடகொரியா தொடர்ந்தும் ஏவுகணைகளைப் பரிசோதிப்பதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.



வடகொரியாவுடனான போருக்கு அமெரிக்கா தயாராகி விட்டது என அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், வட கொரியா இந்த மாத நடுப்பகுதியில் அமெரிக்காவின் குவாம் தீவைத் தாக்கும் வகையில் நான்கு ஏவுகணைகளைப் பரிசோதிக்கத் திட்டமிட்டுள்ளது என இரு தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தது.

இதனை அடுத்து, இரு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வடமேற்கு சிரியப் பகுதியில் மீட்பு பணியாளர் 7 பேர் கொலை!




ஜிகாதிஸ்டுகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வடமேற்கு சிரியாவின் சர்மீன் நகரில் சிரிய தன்னார்வ மீட்பு பணியாளர்கள் ஏழு பேர் கொல்லப்பட்டமைக்கு அமெரிக்கா கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

''ஆபத்தான சூழ்நிலையில் உயிரைக் காப்பாற்றுவதற்காக போராடும் தொண்டர்களின் உயிரைக் காவு கொண்ட மை கண்டிக்கத்தக்கது. மாம நபர்களின் இந்தச் செயல் மிகவும் கோழைத்தனமானது''-என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள இட்லிப் மாகாணத்தில் இனந்தெரியாதோரால் நடத்தப்பட்ட இந்தத் துப்பாக்கிச்சூட்டிலேயே, மேற்படி மீட்பு பணியாளர்கள் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலை அடுத்து பணியாளர்களின் இரு பஸ்கள் மற்றும் அவர்களது தொலைத் தொடர்பு சாதனங்கள் என்பன தாக்குதல்தாரிகளால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதலுக்கான நோக்கம் தொடர்பில் தகவல் எதுவும் வெளியாகவில்லை.



## அயர்லாந்தில் ராஜாவாக முடிசூட்டப்பட்ட மலை ஆடு!

அயர்லாந்தின் தென் மேற்கு பகுதியில் உள்ள கில்ர்கின் கிராமத்தில் காட்டு மலை ஆடு ஒன்றுக்கு ராஜாவாக முடிசூட்டப்பட்டுள்ளது

அயர்லாந்தின் பழைமையான திருவிழாக்களில் ஒன்றான பக் பேர் பண்டிகைக்காக கில்ர்கின் நகரத்தில் உள்ள மக்கள் காட்டு மலை ஆட்டை அழைத்து வந்து ராஜாவாக முடி சூட்டியுள்ளனர்.

பக். திருவிழாவின் ராணியான உள்ளூர் சிறுமிஒருவரின்கையால் இந்த ஆட்டுக்கு முடி சூட்டியுள்ளனர். (ச)

# செப்ரெம்பரில் பாக். செல்கிறது இலங்கை அணி

இலங்கை அணி எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் பாகிஸ்தானுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது. இதனை இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமதிபால பரிந்துரைத்துள்ளார்.

கொழும்பில் கடந்த சனிக்கிழமை நடந்த ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் (ACC) பொதுக்குழுக்கூட்டத்திலேயே அவர் இது பற்றி குறிப்பிட்டுள்ளார்.

எமது அணியைப் பாகிஸ்தான் அழைத்துச் செல்வதில் நான் ஆர்வமாக உள்ளேன். எமது பாதுகாப்பு நிபுணர்களின் மதிப்பீட்டின்படி அங்கு சாதகமான சூழலே காணப்படுகின்றது. நாடெங்கும் பாதுகாப்பு நிலைமை முன்னேற்றம் கண்டிருப்பதோடு குறிப்பாக லாகூரில் பாதுகாப்பான சூழல் இருப்பதாக நம்புகின்றனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக மூன்று ரி-20 போட்டிகளில் விளையாடவுள்ளோம். அந்த போட்டிகளில் குறைந்தது ஓர் ஆட்டத்தை லாகூரில் விளையாட எதிர்பார்த்துள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-



பாகிஸ்தானில் பாதுகாப்புக்கு உங்களின் ஆதரவை தரும்படி அங்கத்தவர்கள் என்ற வகையில் உங்கள் ஒவ்வொருவரிடமும் நான் கோரிக்கை விடுகின்றேன். எப்போதும் ஆபத்து இருக்கத்தான் செய்யும். சம்பியன்ஸ் கிண்ணத்தின்போது லண்டனில் இரு தாக்குதல்கள் இடம்பெற்ற நிலையிலும் ஐ.சி.சி. பாதுகாப்பு உறுதிப்பாட்டின் கீழ் கிரிக்கெட் போட்டிகள் தொடர்ந்து நடைபெற்றன. அதேபோன்று, ஆசியாவின் கிரிக்கெட் குடும்பம் என்ற வகையில் எமது அங்கத்துவ நாடுகளுடன் முடிந்தவரை இணைக்கத்துடனும் புரிதலுடனும் செயற்பட்டு அவர்களுக்கு நாம் முழு ஆதரவை வழங்க வேண்டும்.- என்றார்.


சுமதிபாலவின் கருத்துகளுக்கு பதிலளித்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவரும் தற்போதைய ACC தலைவருமான நஜாம் சாதி, நாட்டின் பாதுகாப்பு நிலை குறித்து விளக்கியதோடு, பாகிஸ்தானின் கண்காணிப்பு முறை குறித்தும் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு என்பது நவீன நகரங்களின் குற்றச்செயல்கள், தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் முன்னுதாரணமாக இருப்பதாகவும் விளக்கிய அவர், ரோந்து நடவடிக்கைகள் மூலம் நாட்டின் கண்காணிப்பு, தொலைத்தொடர்பு மற்றும் தகவல் மேலாண்மையைப் பலப்படுத்துவது குறித்தும் குறிப்பிட்டார்.

அனைத்துச் செயல்முறைகளும் முறையாக இடம்பெறும் பட்சத்தில் இலங்கை அணி இந்த ஆண்டு செப்ரெம்பரில் பாகிஸ்தானில் விளையாட எதிர்பார்த்திருக்கும் போட்டிகளில் ஒரு போட்டி லாகூரில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு லாகூர் நகரிலேயே இலங்கை அணி மீதான தீவிரவாதத் தாக்குதல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ப)

# பரகுவே மரதனில் சாதனைபடைத்த யாழ்ப்பாணத் தமிழன்



தென்னமெரிக்காவில் இடம்பெற்ற மரதன் ஓட்டப்போட்டியில் இலங்கைத் தமிழர் ஒருவர் சாதனை படைத்துள்ளார். தென் அமெரிக்காவின் பரகுவேயில் இடம்பெற்ற மரதன் ஓட்டப்போட்டியிலேயே யாழ்ப்பாணம், காரைநகர் பத்தர்கேணியைச் சேர்ந்த சிவபாலன் நவமணி தம்பதியரின் மகனான நிமலன் என்பவரே சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இந்தப் போட்டியில் அவர் 42 கிலோமீற்றர் தூரத்தை 5 மணித்தியாலங்கள் 23 நிமிடங்கள் 53 செக்கன்களில் கடந்து சாதனை படைத்து இலங்கை மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இது இவரது இரண்டாவது மரதன்ஓட்ட போட்டி என்பதுடன், இவரது முதலாவது போட்டி கடந்த 2014 ஆம் ஆண்டில் பங்குபற்றி இதே தூரத்தினை 5 மணித்தியாலங்கள் 44 நிமிடங்களில் கடந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 19ஆவது ஆசிய மகளிர் சிரேஷ்ட கரபந்தாட்டம்:

# வெற்றியைச் சுவைத்தது இலங்கை மகளிர் அணி

பிலிப்பைன்ஸில்நடைபெற்று வரும் 19ஆவது ஆசிய மகளிர் சிரேஷ்ட கரபந்தாட்டப் போட்டிகளில் இலங்கை மகளிர் அணி முதலாவது வெற்றியைச் சுவைத்துள்ளது.

குழுவுக்கான லீக் சுற்றில் மூன்று போட்டிகளிலும் தோல்வியடைந்த இலங்கை, நேற்று முன்தினம் காலை நடைபெற்ற நிரல்படுத்தலுக்கான சுற்றில் தனது முதலாவது வெற்றியை ஈட்டியுள்ளது.

ஐந்து செட்கள் வரை நீடித்ததும் கடைசிவரை விறுவிறுப்பைத் தோற்றுவித்ததுமான ஹொங்கொங் மகளிர் அணிக்கு எதிரான போட்டியில் 3 :2 என்ற செட்கள் அடிப்படையில் இலங்கை மகளிர் அணி வெற்றி பெற்றது.

முதலாவது செட்டில் 14 : 25 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஹொங்கொங்கிடம் இலங்கை தோல்வி அடைந்தது. இதன் காரணமாக இப் போட்டியிலும் இலங்கைக்குத் தோல்விதான் கிட்டும் என பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.





ஆனால் இரண்டாவது செட்டில் அதி சிறந்த ஆற்றல்களுடனான நுட்பத் திறனை வெளிப்படுத்திய இலங்கை 25 :14 என வெற்றிபெற்றது.

மூன்றாவது செட்டில் கடும் போட்டிக்குப் பின்னர் 23:25 என இலங்கை தோல்வியைத் தழுவியது.

எவ்வாறாயினும் நான்காவது செட்டில் மீண்டும் திறமையாக விளையாடிய இலங்கை 25 :23 என வெற்றிபெற்றது.

தீர்மானம் மிக்க கடைசி செட்டில்இரண்டுஅணிகளும்மாறிமாறி புள்ளிகளைப் பெற இறுதியில் டியூஸ் முறையில் 16:14 என இலங்கை வெற்றிபெற்றது.

இதற்கு அமைய 9 ஆம் இடத்திலிருந்து 12 ஆம் இடம்வரையான நிரல்படுத்தல் சுற்றில் விளையாட இலங்கை மகளிர் அணி தகுதிபெற்றுள்ளது.

# அடுத்த கபில்தேவாக பாண்டயா: தேர்வுக்குழு தலைவர் புகழாரம்

இந்திய அணியில் அடுத்த கபில்தேவாக ஹர்திக் பாண்டயா உருவெடுக்க வாய்ப்புகள் உள்ளன என தேர்வுக்குழுத் தலைவர் எம்.எஸ்.கே. பிரசாத் கூறியுள்ளார்.

இலங்கை அணிக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தின்போது இந்திய பந்து வீச்சாளரான ஹர்திக் பண்டையா 96



பந்துகளில் 108 ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்தார். இந்தச் சாதனை குறித்து இந்திய கிரிக்கெட் தேர்வுக்குழுத் தலைவர் எம்.எஸ்.கே. பிரசாத் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஹர்திக் பாண்டயாவின் ஆட்டம் சிறப்பாக உள்ளது. ஒரு சிறந்த சகலதுறை ஆட்டக்காரரை கண்டுபிடிப்பதற்கான தேடல் ஹர்திக் பாண்டயா கிடைத்ததன் மூலம் முடிந்துவிட்டதாகக் கருதுகின்றேன். இதே போன்ற ஆட்டத்தைத் தொடர்ந்து வெளிப்படுத்தும் பட்சத்தில், அவர் அடுத்த கபில்தேவாக உருவெடுப்பார். தனக்குக் கிடைத்த வாய்ப்புகளை அவர் மிகச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

# 181 ஓட்டங்களுக்குள் சுருண்டது இலங்கை: தொடரைக் கைப்பற்றியது இந்தியா!



பல்லேகல மைதானத்தில் நடைபெற்ற இந்தியா மற்றும் இலங்கை அணிகள் மோதிக் கொண்ட கடைசி டெஸ்ட் போட்டியில் 171 ஓட்டங்களால் இந்தியா வெற்றி பெற்றது.

இந்தியா- இலங்கை அணிகள் மோதும் 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பல்லேகலவில் நேற்று நடை பெற்றது. இந்தியா முதல் இன் னிங்ஸில் 487 ஓட்டங்களைக் குவித்தது. தவான் (119 ஓட்டங்கள்), ஹர்த்திக்பாண்ட்யா 108 ஓட்டங்களைக் குவித்து அணிக்குப் பலம் சேர்த்தனர்.

இந்திய வீரர்களின் அபாரமான பந்துவீச்சால் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 135 ஓட்டங்களுடன் சுருண்டு 'பொலோ ஒன் ஆனது. அணித் தலைவர் சந்திமால் அதிகபட்சமாக 48 ஓட்டங்களை எடுத்தார். குல்தீப் யாதவ் 4 விக்கெட்டும், முகமது ஷமி, அஸ்வின் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.




352 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இலங்கை அணி 2ஆவது இன்னிங்ஸைத் தொடர்ந்து விளையாடியது. நேற்றுமுன்தினம் 2ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில், இலங்கை அணி ஒரு விக்கெட்இழப்புக்கு 19 ஓட்டங்களைப் பெற்று இருந்தது. கருணாரத்ன 12 ஓட்டத்துடனும் புஷ்ப குமார ஓட்டங்கள் எதுவும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டம் ஆரம்பமாகியது. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க மேலும் 333 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலை காணப்பட்டது, கைவசம் 9 விக்கெட் என்ற நிலையில் இலங்கை அணி தொடர்ந்து ஆடியது. ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் இலங்கையின் 2ஆவது விக்கெட் விழுந்தது. கருணாரத்ன 16 ஓட்டங்களுடன் அஸ்வினின் பந்தில் ஆட்டம் இழந்தார். .

அதனைத் தொடர்ந்து புஷ்ப குமார, குஷல் மென்டீஸ் அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர்.

இந்நிலையில், மதிய உணவு இடைவேளைக்கு பிறகு, இந்திய அணியின் பந்து வீச்சைத் தாக்குப் பிடிக்க முடியாமல் இலங்கை அணி திணறியது. இறுதியில் இலங்கை அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 181 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.


இலங்கை அணியில் அதிக பட்சமாக நிரோஷன் டிக்வெல்ல மட்டும் 41 ஓட்டங்களை எடுத்தார். மற்றவர்கள் விரைவில் ஆட்டமிழந்தனர். இதனால் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 171 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்திய தரப்பில், அஸ்வின் 4 விக்கெட்டுகளும், ஷமி 3 விக்கெட்டுகளும், உமேஷ் யாதவ் 2 விக்கெட்டுகளும், குல்தீப் யாதவ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்கள்.

இந்த வெற்றியைத் தொடர்ந்து, இலங்கை அணி 0:3 என்ற கணக்கில், சொந்த மண்ணில் தோல்வி அடைந்தது. முதல் டெஸ்டில் 304 ஓட்ட வித்தியாசத்திலும், 2ஆவது டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 53 ஓட்ட வித்தியாசத்திலும், 3ஆவது டெஸ்டில் இன்னிங்ஸ் மற்றும் 171 ஓட்ட வித்தியாசத்திலும் வென்று இந்திய அணி தொடரைக் கைப்பற்றி அசத்தியுள்ளது.

வெளிநாட்டில் நடந்த டெஸ்ட் தொடரின் அனைத்துப் போட்டிகளிலும் இந்தியா வெற்றி பெற்றது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# கிண்ணத்தைச் சுவீகரித்தனர் குமுழமுனை ஐக்கிய அணியினர்!






வற்றாப்பளை செந் தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக் கெட் சுற்றுப்போட்டியில் முல்லைத்தீவுக் குமுழமுனை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றுக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

30அணிகள்பங்குகொண்ட இப் போட்டியின், இறுதி ஆட்டத்தில் நீராவிப்பிட்டி அல்ஹிஜிரா அணியை எதிர்த்து போட்டியிட்ட ஐக்கிய விளையாட்டு கழக அணியினர் பெரும் சவாலுக்கு மத்தியில் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

இறுதிச்சுற்று நேற்று முன்தினம் வற்றாப்பளை செந் தமிழ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

அணிக்குப் பத்து ஓவர்களைக் கொண்டதாக நிர்ணயிக்கப்பட்ட போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஐக்கிய விளையாட்டுக் கழக அணியினர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தனர். துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அல்ஹிஜிரா அணியினர்பத்து ஓவர்கள் நிறைவில் 66 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்து ஆட்டத்தை நிறைவுக்கு கொண்டு வந்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய குமுழமுனை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி, ஆரம்ப விக்கெட்டுகளை இழந்த போதும், பின்னணி துடுப்பாட்ட வீரர்களின் நிதானமான துடுப்பாட்டத்தின் மூலம் 9.2 ஓவர்களில் 7 விக்கெட்டுகளைஇழந்து 70ஓட்டங்களைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கி கொண்டனர்.

ஆட்ட நாயகனுக்கான விருதை குமுழமுனை ஐக்கிய விளையாட்டு அணியைச் சேர்ந்த எஸ்.சிவதர்சன் பெற்றிருந்தார். 30 கழகங்கள் இப் போட்டியில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப் போட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, வட மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் மற்றும்விளையாட்டுகழகத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ப-100)

# ஊழியர் சேமலாப நிதியத்தில் வீடமைப்புக் கடன் பெறமுடியும்

யாழ்ப்பாணம், ஓக.15

ஊழியர்கள் தமது ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து 30 வீதமான தொகையை வீடமைப்பு கடனாக பெற்றுக்கொள்ள முடியும் என ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆணையாளர் டி.பி.கே. பி.வீரகோன் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் இந்த வருடத்தில் இதுவரை 16 ஆயிரம் பேர் கடன் பெற்றுக்கொண்டுள்ளனர் எனத் தெரிவித்த ஆணையாளர் தொழில் வழங்குநர்கள் உரிய காலத்தில் தமது ஊழியர்களின் நிதியத் தொகையை அனுப்பிவைப்பார்களாயின் அநாவசியமாக அபராதம் செலுத்த வேண்டியதில்லை என்றும் அவர் கூறினார். (ம)

## டெனிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) குறித்து ஆராய்வதற்காக ரெலோவின் தலைமைக்குழு விரைவில் கூடும் என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

பெரும்பாலும் அக்கூட்டம் இவ்வார இறுதியில் நடைபெறக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ரெலோவின் தலைவரும் எம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன் தற்போது இந்திய சென்றுள்ளார். அவர் இலங்கை திரும்பியதும் இக்கூட்டம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## செஞ்சோலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) 20 ஆம் திகதி வரை க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி இடம் பெற்றது. இதில் முல்லைத்தீவு, துணுக்காய் மற்றும் கிளிநொச்சி கல்வி வலயங் களைச் சேர்ந்த 400 வரையான மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது ஓகஸ்ட் 14 ஆம் திகதி இலங்கை விமானப் படை நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் 54 மாணவிகளும் 7 பணியாளர்களுமாக 61 பேர் கொல்லப்பட்டனர்.

இவர்களுக்கான பிரதான நினைவேந்தல் நிகழ்வு நேற்று முல்லைத்தீவு வள்ளிபுனத்தில் செஞ்சோலை அமைந்திருந்த வளாகத்தில் இடம்பெற்றது. வன்னி குரோஸ் நினைவேந்தல் அமைப்பினால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தகர் சங்கத் தலைவர் நீதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வு பொதுச் சுடர் ஏற்றலுடன் ஆரம்பமானது. படுகொலை செய்யப்பட்ட இரு மாணவிகளின் தந்தையான கனகையா பொதுச் சுடரை ஏற்றினார். பின்னர் ஒவ்வொரு மாணவிகளினதும் பெற்றோர் ஒவ்வொருவராக அழைக்கப்பட அவர்கள் தமது பிள்ளைகளின் திருவுருவப் படங்களுக்கு சுடரேற்றி மலர் மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து செஞ்சோலைக் கீதம் ஒலிக்கவிடப்பட்டது. அப்போது ஏனையவர்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். பின்னர் அக வணக்கம் இடம்பெற்றது. வன்னி குரோஸ் அமைப்பின் இணைப்பாளர் ரூபன் தொடக்கவுரை ஆற்றினார். பலியான மாணவிகள் சார்பாக தாயார் உதயகுமார் கௌசிகா நினைவுப் பகிர்வு வழங்கினார்.

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சிவமோகன், வடமாகாண சபை உறுப்பினர்களான கமலேஸ்வரன், எம்.கே.சிவாஜிலிங்கம், ஆ.புவனேஸ்வரன், க.சிவநேசன், முத்துஐயன்கட்டு வலதுகரை மகா வித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராசா, யோ.புரட்சி ஆகியோர் நினைவுரை ஆற்றினர்.

பின்னர், பலியான மாணவிகளுக்கு நினைவுத் தூபி அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. முதலாவது அடிக்கலை சம்பவத்தில் பலியான இரு பிள்ளைகளின் தந்தையார் கனகையா நாட்டினார். தொடர்ந்து ஏனைய மாணவிகளின் பெற்றோர் அடிக்கல் நாட்டினர்.

யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் வன்னியில், செஞ்சோலை வளாகத்தில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்வில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

**யாழ்.பல்கலைக்கழகத்தில்**

இதேவேளை, யாழ்.பல்கலைக்கழகத்திலும் நேற்று மிகவும் உணர்வெழுச்சியுடன் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. இதில் துணைவேந்தர் பேராசிரியர் கே. விக்னேஸ்வரன் மற்றும் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், மாணவர் கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

**ரவிகரனில் அலுவலகத்தில்**

வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தனது அலுவலகமான மக்கள் தொடர்பகத்தில் மேற்படி மாணவிகளுக்கு அஞ்சலி செலுத்தினார். இதில் அவரது ஆதரவாளர்கள் சிலரும் பங்குபற்றினர்.

**மட்டக்களப்பில்**

அதேபோன்று, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி செஞ்சோலை வளாகத்திலும் மட்டக்களப்பு கோப் சென்றர் மண்டபத்திலும் மேற்படி மாணவிகளுக்கான நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுத்தது.

**புலம்பெயர் தேசங்களில்**

தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் பல நாடுகளிலும் தமிழகத்திலும் செஞ்சோலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவிகளுக்கான அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இதில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு மாணவிகளுக்கு அஞ்சலி செலுத்தினர். (ம)

## ஓட்டோவை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அந்த இடத்திலேயே பலியானார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ரயிலே நேற்று மாலை 4.30 மணியளவில் பாதுகாப்பற்ற ரயில் கடவையைத் தாண்டிச் செல்ல முற்பட்ட ஓட்டோவைப் பந்தாடியது.

இந்த விபத்தில் ஓட்டோவின் சாரதியான – ஈச்சன்குளம் பகுதியைச்சேர்ந்த – எஸ்.கிருபா (வயது -28) என்பவர் உயிரிழந்தார். (24)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஐ.நாவின் இலங்கை வதிவிட அணியை நேற்றுக் கைதடியில் உள்ள மாகாண முதல்வரின் அலுவலகத்தில் தாம் சந்தித்தபோதே இப்படிப் பட்டவர்த்தனமாகத் தெரிவித்தார் முதல்வர் விக்னேஸ்வரன்.

இலங்கைக்கான ஐ.நா.வதிவிட இணைப்பாளர் உனா மக்கவுலி அம்மையார் தலைமையிலான குழுவையே முதல்வர் நேற்று முற்பகல் சந்தித்தார்.

அச்சமயம் அவர்தாம் அங்கு ஆற்றிய உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

நீங்கள் எல்லோரும் இப்போது 2018 – 2022 இற்குரிய ஐ.நா.பேண்தகு அபிவிருத்தித்திட்டப்பணியில் ஈடுபட்டிருக்கின்றீர்கள். முன்னர் 2013 – 2017 இற்குரிய காலப் பகுதியில் ஐ.நா. அபிவிருத்தி உதவித்திட்ட பணி முன்னெடுக்கப்பட்டது.

அந்த ஐ.நா. அபிவிருத்தி உதவித் திட்டப் பணியின் ஆவணங்களில் 'மஹிந்த சிந்தனை' பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு மாகாண மக்கள் 'மஹிந்த சிந்தனை'யை நிராகரித்துள்ளார்கள் என்பது நீங்கள் அறிந்ததே.

'மஹிந்த சிந்தனை' எதனைக் குறித்தாலும், அதனை நிராகரித்தே எங்களை மக்கள் தனித்துவமாக வடக்கு மாகாண சபைக்குத் எங்களைத் தெரிவு செய்தார்கள்.

2015 ஜனவரி 8 ஆம் திகதி அரசை மாற்றியமைத்த முக்கிய – முதன்மை – சக்தி நாங்கள் தான்.

முன்னர் – அப்போது உங்களின் வதிவிடப் பிரதிநிதியாக இருந்த சுபினா நந்திக்கும் எமக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் நீடித்தன. அவர் எங்களை மத்திய அரசின் தொங்கு தசையாகக் கருதினார். மத்திய அரசு எதிர்பார்க்கின்றமையை நாங்கள் செய்ய வேண்டும் என அவர் எதிர்பார்த்தார். அதனால் எங்கள் கருத்துக்களை அவர் கவனத்தில் எடுக்கவில்லை.

ஆனால் அவர் எதிர்பார்த்தமை போன்று செயற்பட நாங்கள் தயாராக இருக்கவில்லை.

இப்போது ஐ.நா.குடும்பத்தின் வதிவிடப் பிரதிநிதியாக இங்கு உனா மக்கவுலி அம்மையார் இருக்கின்றமையையிட்டு நாம் மகிழ்வடைகின்றோம். எங்களுக்கும் ஜரிஷ் மக்களுக்கும் இடையில் உள்ள ஒற்றுமையை நான் அவருக்குச் சுட்டிக்காட்டியுள்ளேன்.

அந்த நேரத்தில் ஐ.நா. கவனித்திருக்கவேண்டிய பல விடயங்கள் நந்தியால் கவனிக்கப்படவில்லை என்பதை அவரிடம் அப்போது நாம் கூறியிருந்தோம்.

அரசு, உதவும் நாடுகள் சமூகம், சிவில் சமூகம் ஆகிய தரப்புகளுக்கு இடையே நேர்மையான தரகராகச் செயற்படும் தனது தரத்தில் ஐ.நா. நடுநிலை பாத்திரம் வகிக்கவில்லை என்று உங்கள் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதை நான் பார்த்துள்ளேன்.

இந்த நாடு முழுமையாக அடிமட்ட வருமான நாடு என்பதிலிருந்து மத்திய வருமான நாடாக மாற்றம் பெற்றுள்ளது. ஆனால் வடமாகாணம் மட்டும் அப்படி மாறவில்லை. இப்போதும் அது தாழ்ந்த வருமானப் பிரதேசமாகவே உள்ளது. அதை நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும்.

வடக்கில் இன்றும் ஒன்றரை லட்சம் இராணுவம் நிலைகொண்டுள்ளது. எங்களின் நிலங்களை ஆக்கிரமித்து, எங்கள் உத்தியோகபூர்வ கட்டடங்களை பாவித்து, குடிதண்ணீர் உட்பட எமது இயற்கை வளங்களைப் பயன்படுத்தி வருகின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

எங்கள் மக்களுக்கு அச்சத்தையும் எரிச்சலையும் தரும் தரப்பாக அவர்கள் உள்ளனர். குறிப்பாக, தெற்கிலிருந்து மீனவர்களை வெளிப்படையாக இங்கு கூட்டி வந்து, சட்டவிரோத முறையிலான மீன்பிடி முறைமைகளைப் புகுத்தி, எமது மீனவக் குடும்பங்களுக்கு பயத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்துவதுடன் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரங்களையும் பறித்து வருகின்றனர்.

முல்லைதீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் ஐ.நா. மனித குடியிருப்புத் திட்ட செயற்பாடுகள் தொடர்பில் விமர்சனங்கள் உள்ளன. வழமையான நடைமுறைகளுக்கு உட்படாமல் காடுகள் அழிக்கப்பட்டு, முஸ்லிம்களுக்கு என வீடுகளும் வீதிகளும் அமைக்கப்படுகின்றன.

உங்கள் செயற்பாடுகளை விமர்சிப்பது எனது நோக்கம் அல்ல.

வடக்கிலும் கிழக்கிலும் இருக்கும் நாங்கள் எமது தனித்துவத்தைப் பேணிப் பாதுகாப்பதற்காக அரை நூற்றாண்டுகளுக்கு மேலாகப் போராடி வரும் நிலையில், எங்களுது சட்டபூர்வமான உரிமைகளை வழங்குவதற்கு எந்த அரசும் முன்வரவில்லை. அதனை ஐ.நா. புரிந்து உணர்ந்து கொள்ளுமாயின் நெருக்கமான கூட்டுச் செயற்பாடுகளுக்கு வாய்ப்பாக அது அமையும் என்பதனால் இதனைக் குறிப்பிடுகிறேன். – என்றார் முதல்வர் விக்னேஸ்வரன். (உ)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சட்டத்தரணி பா.டெனீஸ்வரன்.

நேற்று மன்னாரில் ஊடகங்களை ஒன்றுகூட்டி வைத்துத் தாம் வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

எனது மாவீரர் போராளிகளுக்கு எனது அன்பான வேண்டுகோள். இந்த அமைச்சர் வாரியத்தில் சில மாதங்களாக விருப்பம் இல்லாமல், அதேநேரத்தில் எனது பக்கம் உள்ள நியாயங்களை நிலைநாட்ட வேண்டும், நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றேன்.

இன விடுதலைக்காக – எமது மக்களின் எதிர்காலத்துக்காக – இவர்கள் செயல்படுகின்றார்களா என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. உண்மையில் இது மிகவும் வேதனைக்குரிய விடயம்.

கடந்த காலங்களில் எமது இனத்துக்காக எத்தனையோ உயிர்களை விதைத்திருக்கின்றோம். உங்களின் உயிர்களை துச்சமாக மதித்து எமக்காக போராடியுள்ளீர்கள் நீங்கள்.

2009 ஆம் ஆண்டுக்கு பின்பு போராளிகளும் மாவீரர் குடும்பங்களும் – குறிப்பாக தங்கள் கணவர்மார்களை இழந்த பெண் போராளிகளும் – படும் கஷ்ட துன்பங்கள் அதிகமானவை. இவை சொல்லில் அடங்காதவை.

எத்தனையோ தசாப்த காலமாக இருந்த பெரியவர்கள், அரசியல் ரீதியாக இருந்த தலைவர்கள் உங்கள் மட்டில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைக் குறைந்தது 2009 ஆம் ஆண்டுக்குப் பிறகாவது எடுத்திருக்க வேண்டும்.

ஆனால் வாய்ப் பேச்சில் இருந்தார்களே ஒழிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் அவர்கள் இறங்கவேயில்லை.

2014 ஆம் ஆண்டுக்குப்பிறகு ஜனாதிபதி ராஜபக்ஷ காலத்தில் நான் பல உயிர் அச்சுறுத்தலின் மத்தியில் போராளிக் குடும்பங்களுக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் சென்றேன். அது தற்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நீங்களும் தொடர்ந்து உங்கள் வாழ்வாதாரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

என்னைப் பொறுத்தமட்டில் கட்சியோ அல்லது முதலமைச்சரோ எனக்குப் பெரிதல்ல. அவர்கள் எனக்குப் பெரியவர்களாக இருந்திருக்க முடியும் – அவர்கள் நீதியின்பால் நியாயமாக, நேர்மையாக இருந்திருந்தால் நான் அவர்களின் காலடியில் நின்றிருப்பேன்; அவர்கள் கூறுவதை ஏற்று நடந்திருப்பேன்.

இங்கு பதவி, பட்டம், ஆசைகள்தான் மேலோங்கி இருக்கின்றன. எமது மக்களின் எதிர்காலம் அத்துடன் கடந்த காலங்களின் கொடுக்கப்பட்ட உயிர்களுக்கு அர்த்தம் தேடுகின்றவர்களாக இல்லாதவர்கள் பலரைப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

நான் விருப்பம் இல்லாமல் இந்த அமைச்சுப் பொறுப்பில் இருக்கின்றேன். இருந்துகொண்டு நான் நீதிக்காக போராடுவதா அல்லது வெளியில் வந்து போராடுவதா என்பதை நீங்கள் உண்மையாக, நேர்மையாக இருந்து சிந்தித்து முடிவு எடுங்கள். நான் அமைச்சராகத் தொடர்ந்து இருப்பதா அல்லது விலகுவதா என்பது இனி உங்கள் கையில் தான் இருக்கின்றது.

இதை நான் கூறுவதற்கு காரணம் உண்டு. பல போராளிகள் என்னுடன் தொடர்பு கொண்டு வருகின்றீர்கள். அதனால் தான் நான் இக்கோரிக்கையை உங்களிடம் வைக்கின்றேன். ஏனென்றால் கடந்த சில தினங்களாக மாவீரர் குடும்பங்களும் போராளிகளும் இன்றைய அரசியல் நிலைமைகளில் நான் செய்ய வேண்டியவற்றை எனக்கு தெளிவாக எடுத்த கூறி வருகின்றீர்கள். ஆகவே உங்கள் கையில் எனது முடிவு.– என தெரிவித்தார்.

## ஷிராந்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசு தயாராகி வருகின்றது என்ற செய்திகள் வெளியாகியுள்ள பின்னணியிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் கடந்த 27, 28 ஆம் திகதிகளில் இருவரையும் முன்னிலையாகுமாறு குற்றப்புலனாய்வுத்துறை அழைப்பு விடுத்திருந்த போதிலும் சில, பல காரணங்களைக் காட்டி அத்தினங்களில் அவர்கள் ஆஜராகியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

றக்பி விளையாட்டு வீரர் வஸீம் தாஜுதீன் 2007 இல் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் 'டிபெண்டர்' ரக ஜீப் ஒன்று தொடர்பாகவே அவர்கள் இருவரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

செஞ்சிலுவைச் சங்கத்தினால் 'சிரிலிய சவிய நிறுவகம்' என்ற அமைப்புக்கு வழங்கப்பட்ட இந்த ஜீப், ஷிராந்தி ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டில் அச்சமயம் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

மேற்படி கொலைச் சம்பவத்துடன் அந்த ஜீப் தொடர்புபட்டமை குறித்து ஷிராந்தி ராஜபக்ஷவுக்குத் தெரியுமா, அந்த ஜீப்பை அச்சமயம் யோஷித ராஜபக்ஷ பயன்படுத்தினரா ஆகிய விடயங்கள் குறித்து விசாரிப்பதற்கே இவர்கள் இருவரும் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

# சமஷ்டியே வேண்டாம் என்று போராடிய தமிழர் ஏன் தனி நாட்டுக் கொள்கைக்கு தள்ளப்பட்டார்கள்?

## சிந்தித்துப் பாருங்கள் என்கிறார் அமைச்சர் மனோ கணேசன்



கொழும்பு, ஓக. 15

சமஷ்டியே வேண்டாம் என்று போராடிய தமிழர்கள் ஏன் தனி நாட்டுக் கொள்கைக்கு தள்ளப் பட்டார்கள் என்பதை சிந்தித்து பாருங்கள் என்று தேசிய சக வாழ்வு மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அரசியல் தலைமைத்துவம் தொடர்பிலான கற்கைக்கான நிகழ்வு நேற்று முன்தினம் இலங்கை மன்றக்கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மனோ கணேசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதான தகுதியாக மும்மொழித் தேர்ச்சி இருக்க வேண்டும். மக்களுக்கு இதனைக் கூற முன்னர் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மும்மொழிகளையும் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லாவிடின் நாட்டை சரியாக வழிநடத்த முடியாது. சிங்கள மக்களின் மனதை தமிழர்களும், தமிழர்களின் மனதை சிங்களவர்களும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு இன மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் அறிந்துகொள்ள மொழி தேர்ச்சி அரசியல் தலைமைகளுக்கு இருக்க வேண்டும்.

மேலும், அரசமைப்பு மூலமாக தமிழ் மக்களுக்கு திருட்டுத்தனமாக சமஷ்டியை வழங்கும் முயற்சிகள் முன்னெடுக்கப் படுகின்றன என சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார் என்று தமிழ் பத்திரிகை ஒன்றில் செய்தியை நான் அவதானித்தேன். ஆனால், இந்த காரணத்தை அவர் எவ்வாறு முன்வைத்தார் என்று எமக்கு விளங்கவில்லை.

அவர் இருக்கும் இடத்தில் இருந்தே நாமும் அரசமைப்பு குறித்து கலந்துரையாடி வருகின்றோம். அவ்வாறு இருக்கையில் பிரிவினைக்கு அமைவான எந்த முயற்சிகளும் மறைமுகமாக எவரும் முன்னெடுக்கவில்லை.

தமிழ் மக்களை வேறு ஒரு ரீதியில் சித்திரிக்க இந்தக் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றதா என்பது தெரியவில்லை. ஆனால், இன்று தமிழ் மக்களின் கருத்துக்கள் சிங்கள பத்திரிகைகளில் இடம்பெறுகின்றன.

இவர்கள் சமஷ்டி கருத்துக்களை முன்வைத்து அரசியல் செய்கின்றனர். ஆனால், முதலில் சமஷ்டி என்பது தெற்கில் இருந்தே உருவாக்கப்பட்டது. தெற்கில் இருந்தே வடக்குக்கு இந்தக் கருத்துக்கள் சென்றன.

ஆனால், அப்போது வடக்கில் இருந்த அரசியல் தலைமைகள் இந்தக் கருத்தை நிராகரித்தன. சமஷ்டி வேண்டாம் ஒன்றை ஆட்சிக்குள் வாழ வேண்டும் என்ற கருத்துக்களை தமிழர்கள் முன்வைத்தனர்.

அரசுக்கு எதிராக ஆயுத போராட்டம் ஒன்று தெற்கில் இருந்தே உருவாக்கப்பட்டது. 1971 இல் உருவாக்கப்பட்ட போராட்டங்கள் 1983 ஆம் ஆண்டில் பலமடைந்தன. அதன் பின்னரே வடக்கில் ஆயுத போராட்டம் தோன்றியது.

பிரபாகரன் போன்றவர்கள் அதன் பின்னரே உருவாகினர். ஆயுதத்தையும் ஏந்தினர். அதேபோல் அரசியல் கொலைகள் வடக்கில் உருவாக்கப் படவில்லை. அதுவும் தெற்கிலேயே உருவாக்கப்பட்டன. அனைத்து கலவரமும் தெற்கில் இருந்தே உருவாக்கப்பட்டது. சமஷ்டியே வேண்டாம் என்று போராடிய தமிழர்கள் ஏன் தனி நாட்டுக் கொள்கைக்கு தள்ளப் பட்டார்கள் என்பதை அனைவரும் சிந்தித்துப் பாருங்கள்.

கடந்த கால சம்பவங்களை மறந்துவிட்டு இன்று அனைத்து பழியையும் வடக்கில் போட்டுவிட்டனர். கொலை செய்தனர், சமஷ்டி கோரிக்கையை முன்வைத்தனர், அரசியல் கொலைகளைச் செய்தனர் என்று அனைத்து குற்றங்களையும் வடக்கில் சுமத்தி வருகின்றனர். உண்மைகளை முதலில் பெரும்பான்மை சமூகம் தெரிந்து கொள்ள வேண்டும்.

வரலாற்றை மாற்றியமைக்க முடியாது. அவை என்னவென்பதை இளம் அரசியல் வாதிகள் தெரிந்துகொள்ள வேண்டும். அதேபோல் இந்த நாடு சிங்கள நாடு எனவும், சிங்களவர்களுக்கே உரிமை உள்ளது எனவும் தமிழர்கள் வெளியில் இருந்து வந்தவர்கள் எனவும் அண்மையில் ஒரு பௌத்த பிக்கு என்னிடம் வாக்குவாதம் செய்தார்.


ஆனால், நான் மஹாவம்சத்தை முன்வைத்து பேசினேன். எனக்கு வரலாற்றுடன் ஒப்பிட்டும் பேசத் தெரியும். ஆனால் நாம் நல்லிணக்கத்தை உருவாக்கவே முயற்சிக்கின்றோம்.

இந்த நாட்டில் பெரும்பான்மை சிங்களவர்கள், பௌத்தம் பிரதான மதம் என்பதில் எமக்கு எந்தச் சிக்கலும் இல்லை. அதை நாம் ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளோம். ஆனால் எஞ்சிய மதங்களும் இனங்களும் இணைந்தால் மட்டுமே நாடு பூரணமடையும். மாறாக முழுமையான நாட்டை உருவாக்க முடியாது.

19 இனங்கள், 3 மொழிகள், நான்கு மதங்கள் இந்த நாட்டில் உள்ளன. அதை மறுக்க முடியாது. இந்த நாடு அனைத்து தரப்பினருக்கும் உரித்தானது என்பதை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதே போல் அரசியல் ரீதியான அதிகார பகிர்வு அவசியமாகும். அப்போதே பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். மத்திய அதிகாரங்கள் மாகாணங்களுக்குச் செல்ல வேண்டும்.

இது வடக்குக்கு மட்டும் அல்ல தென் பகுதிக்கும் மத்திய மாகாணத்துக்கும் செல்ல வேண்டும். அப்போதே தீர்வு என்ற விடயத்தை சிந்திக்க முடியும்.

இந்த நாட்டில் பொலிஸ், நாடாளுமன்றம், அமைச்சரவை, தேர்தல்கள் ஆணைக்குழு என அனைத்துமே அவசியமானவை. இவற்றை நிராகரிக்க முடியாது. அதை இளம் அரசியல் சமூகத்தினர் உணர்ந்து அரசியலுக்கு வரவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.



# 50 அடி பள்ளத்தில் பாய்ந்தது பஸ்; 21 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு!

கொழும்பு, ஓக. 15

கதிர்காமத்திலிருந்து, நுவரெலியா வலப்பனை வழியாக மிஹிந்தலை நோக்கி பயணித்த தனியார் சுற்றுலா மினி பஸ் வலப்பனை நுவரெலியா பிரதான வீதியில் மாஹா ஊவா பத்தன பகுதியில் குடை சாய்ந்துள்ளது.

மிஹிந்தலை பகுதியிலிருந்து சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக் கொண்டு கதிர்காமத்திற்கு சென்று மீண்டும் மிஹிந்தலைக்கு செல்லும் வழியிலேயே அந்த பஸ் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் பாதையை விட்டு விலகி சுமார் 50 அடி ஆழமான பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்த 21 பேர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாகவும், பஸ் சாரதிக்கு தூக்க கலக்கம் ஏற்பட்டமையின் காரணமாகவும், இந்த விபத்து நேர்ந்தது என நேரடி விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இந்த விபத்தில் காயமடைந்த 21 பேரில் 15 பேர் நுவரெலியா ஆதார வைத்தியசாலையிலும், 6 பேர் வலப்பனை வைத்தியசாலையிலும் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்து தொடர்பில் வலப்பனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வழி அனுமதிப் பத்திரம் இல்லாத ஆறு பஸ்கள் பொலிஸிடம் சிக்கின!

கொழும்பு, ஓக. 15

யாழிலிருந்து கொழும்பு நோக்கி வழி அனுமதிப்பத்திரம் இன்றி பயணித்த, தனியாருக்கு சொந்தமான ஐந்து அதி சொகுசுப் பஸ்களும், அரை சொகுசு பஸ் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவிற்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் ஆலோசனையின் கீழ் அவருடைய விசேட குழுவினர் நேற்று ஆனையிறவு முதல் கொக்காவில் வரை சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, இந்த ஆறு பஸ் சாரதிகளுக்கும் எதிராக கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# வீடமைப்பு அதிகார சபையின் கீழ் வடக்கில் 2,500 வீடுகள் நிர்மாணம்!

வடக்கில் 2,500 வீடுகள் சமத்த செவன என்ற தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் திட்டத்தின் கீழ் அமைக்கப் படவுள்ளன என்று வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் லக்விஜய சாகர பலன்சூரிய தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தத் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் தற்போது 1000 வீடுகள் நிர்மாணிக்கப் பட்டு வருகின்றன.

இதற்கு 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவிடப்படும்.

அதிகாரிகள் சிலர் இதன் நிர்மாணப்பணிகளை பார்வையிட்டுள்ளனர். இந்த வீடுகள் இரண்டு மாத காலப்பகுதிக்குள் அமைக்கப்படவுள்ளன.

மேலும், இந்தத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் வீடுகள் அமைக்கப் படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகளுடன் பிரதமர் சந்திப்பு!



கொழும்பு, ஓக. 15

சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகளுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளார்.

எதிர்வரும் நாள்களில் இந்த விசேட சந்திப்பு நடத்தப்படவுள்ளது என பிரதமர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விசாரணைகள் பூர்த்தியாகி சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஆவணங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதில் தொடர்ந்தும் காலதாமதம் ஏற்பட்டு வருகின்றமை குறித்து பிரதமர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

மேலும், சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மீது சுமத்தப் பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் பேச்சு நடத்தப்படவுள்ளது.

சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகள் மிகுந்த அசமந்தப் போக்குடன் செயற்பட்டு வருகின்றனர் எனவும் பிணை முறி மோசடி விவகாரத்தில் பக்கச் சார்பாக செயற்பட்டுள்ளனர் என்றும் ஆளும் தரப்பின் முக்கியஸ்தர்கள் அண்மையில் பகிரங்கமாக விமர்சனம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir



## செஞ்சோலைப் படுகொலையின் நினைவேந்தல்










முல்லைத்தீவு வள்ளிபுனத்திலுள்ள செஞ்சோலை வளாகத்தில் நேற்று இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வின் காட்சிகள்...



செஞ்சோலையில் கொல்லப்பட்ட மாணவிகளுக்கு வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தனது அலுவலகத்தில் அஞ்சலி செலுத்தினார்.





தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் செஞ்சோலை வளாகத்தில் இடம்பெற்ற நினைவேந்தல்...

# 30 இலங்கையருடன் படகு சுமத்ரா தீவு அருகே மீட்பு

இந்தோனேசியாவில் சுமத்ராவுக்கு அண்மையில் உள்ள நியாஸ் தீவுக்கு அருகே படகில் தத்தளித்த இலங்கையைச் சேர்ந்த அகதிகள் 30 பேர் மீட்கப்பட்டுள்ளனர். முதற்கட்ட விசாரணையில், இவர்கள் நியூசிலாந்து மற்றும் ஆஸ்ரேலியாவில் தஞ்சமடைய திட்டமிட்டிருந்தனர் என்று தெரிய வந்துள்ளது. இலங்கையில் தொடர்ந்து வரும் பாதுகாப்பற்ற சூழல் காரணமாக நாட்டை விட்டுத் தாங்கள் வெளியேறினர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் தங்கள் பயணத்தை ஜூலை மாதமே தொடங்கினர் என்றும் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் சென்ற படகின் இயந்திரம் பழுதானதால் அது நியாஸ் தீவுப்பகுதி அருகே தத்தளித்துள்ளது. மீட்கப்பட்ட அனைவரும் குனுங் சிடோலி(Gunung Sitoli) என்ற துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளனர் என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. வட சுமத்ராவில் உள்ள சிபோல்கா (Sibolga) குடிவரவுத்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள இவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்படக்கூடும் எனக் கூறப்படுகின்றது.

# மட்டக்களப்பில் தமிழர் காணிகளை முஸ்லிம்கள் ஆக்கிரமிக்கின்றனர்

## குமுறுகிறார் வண.அம்பிட்டிய சுமணரத்ன தேரர்



மட்டக்களப்பு, ஓக.15

மட்டக்களப்பில் தமிழ் மக்களுடைய காணிகளை முஸ்லிம் அமைப்புக்கள் அத்துமீறி கைப்பற்றுகின்றன என மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி வண.அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சிங்கள – தமிழ் இனவிழிப்புணர்வுக்கான அமைப்புத் தொடர்பான ஊடகவியலாளர் மகாநாடு நேற்று மங்களராமய விகாரையில் இடம் பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

வாழைச்சேனை, மீராவோடை சக்தி வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் அத்துமீறி வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் உள்ள தமிழ் மக்களின் உறுதிக் காணிகளுக்குள் முஸ்லிம் அமைப்பு ஒன்று அத்துமீறிப் புகுந்து அந்த மக்களுக்கு பல்வேறு அநீதிகளை இழைத்து வருகின்றது.

அங்கு அப்பாவித் தமிழ் மக்களுடைய காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பிரதேச செயலாளரிடமும் வாழைச்சேனை பொலிஸாரிடமும் முறைப்பாடு செய்துள்ளோம். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

முஸ்லிம் அமைப்புக்கள் பொத்துவிலில் இருந்து மூதூர் வரைக்குமான கரையோரப் பிரதேசங்களை ஒரேநகரம் என்ற அளவிற்கு உருவாக்கியுள்ளன. – என்றார்.

மேலும், அமைச்சர் ஹிஸ் புல்லா தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கு என ஆசியாவிலே பெரிய பள்ளி வாசல் ஒன்றைக் கட்டுவதாகக் கூறுகின்றார்.

அப்படியாயின், தமிழ், சிங்கள மாணவர்கள் முஸ்லிம் பள்ளியில் சென்று படிக்க வேண்டுமா? – எனவும் வண.அம்பிட்டிய சுமணரத்ன தேரர் கேள்வி எழுப்பியுள்ளார். (ம)









மன்னாரில் கொட்டித் தீர்க்கும் கன மழையால் மடுத் திருப்பதியில் தங்கியுள்ள மக்கள் நிர்க்கதிக்கு உள்ளானார் கள் இதன் சில பதிவுகள்...

# தெய்வீக சுக அனுபவம்; VI



வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், யாழ். இந்திய துணைத் தூதரகமும் இணைந்து வருடாந்தம் ஏற்பாடு செய்துவரும் தெய்வீக சுக அனுபவம் VI நிகழ்வில் நாளை 16ஆம் திகதி புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு, நல்லூர் சங்கிலியன் தோப்பில் இந்திய பிரபல வயலின் இசைக் கலைஞர்களான மைசூர் கலாநிதி **மஞ்சுநாத்** மற்றும் **நாகராஜ்** சகோதரர்கள் வழங்கும் வயலின் இசை நிகழ்வும் யாழ்ப்பாணத்தின் இளம் நாதஸ்வர வித்துவான் **K.P.குமரன்** குழுவினரின் கெஞ்சிற் கச்சேரியும் நாளை மறுநாள் 17ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு, வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் மேற்படி இந்திய கலைஞர்களின் இசை நிகழ்வும் பயிற்சிப்பட்டறையும் நடைபெறவுள்ளன.

**பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வடமாகாணம்.**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.